551
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 - FEB.1958
MADRAS

தென்றல்

+ ஆசிரியர் — கண்ணதாசன் +

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 4	சென்னை	1-2-58	சனிக்கிழமை	இதழ் 29

வேலுத்தம்பி

என். எஸ். இளங்கோ

பம்பாய்க்கு நான் புதிது. அவ்வளவாக எனக்கு பம்பாய் அப்பொழுது தெரியாது! நானும் எனது நண்பர் கே. என். நாயரும் அந்த கடற்கரைப் பகுதியிலே நடந்துகொண்டு வந்தோம். விக்டோரியா மகாராணியாரின் பெயரிலேயுள்ள ஜூபிலி ஹாலை நாங்கள் அடைந்து அங்கேயிருந்த படங்களைப் பார்த்துக் கொண்டே வந்தோம்—ஒரு படம்! பெயர் செண்பகராமன் பிள்ளை என்று எழுதி தொங்கிக்கொண்டிருந்தது. வடநாட்டில் இந்த பெயருடன் யாரும் இருந்ததாக எனக்கு கவனமில்லை. தென்னாட்டவர் பெயராக இருக்கவே நெருங்கிப் பார்த்தோம்!

அப்பொழுதுதான் எனக்கு நினைவு வந்தது. நேத்தாஜி சுபாஷ் இந்தியாவை விட்டு தப்பித்துக் கொண்டு ஜெர்மன் நாடு போனபோது இந்த செண்பகராமன் பிள்ளை பெர்லின் சிறைக்கூடத்திலே இருந்தார்! நேத்தாஜி சுபாஷ் ஹிட்லரின் அனுமதியின் பேரில் சந்தித்த முதல் இந்தியன் இந்த செண்பகராமன்பிள்ளை தான்! பிறகு நேத்தாஜியும் இந்த செண்பகராமன் பிள்ளையும் இந்திய நாட்டின் விடுதலைக்காக ஜெர்மனி ஜப்பான் போன்ற நாடுகளை எல்லாம் உபயோகப் படுத்திக் கொண்டது பெருங்கதை! இதை எண்ணிப் பார்த்து பெருமைப் பட்டபோதுதான் அந்தப் படத்துக்கு கீழே எழுதியிருந்த இரண்டொரு வரிகளைக் கண்டு என் நண்பர் துள்ளிக் குதித்தார்! நான், என்ன என்ன? என்றேன் சொல்கிறேன் என்றார்.

கடற்கரையை நோக்கிப் போனோம். என் நண்பர் கே. என். நாயர் சொல்லத் தொடங்கினார்.

நான் கடல் அலைகளைக் கவனித்துக் கொண்டே கதை கேட்டேன். மிக மிக சுவாரஸ்யமானது அந்தக் கதை. கதையா அது? தென்னாட்டு வீரப் பெருமக்களின் முன்னணியிலே நிற்கும் மாவீரன் சரித்திரம்.

★

உயர்ந்த மதில்சுவர்கள் நான்குபக்கமும் எழும்பி நின்றன. திருவனந்தபுரம் அரண்மனையின் பலம் பொருந்திய படைவரிசை அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. தென் திருவிதாங்கூர் பணக்காரர்கள் பலர்

அங்கு கொண்டுவந்து நிறுத்தப் பட்டிருந்தனர்.

"நான் என்ன செய்வேன். ஆளப்பணம் தேவை! நீங்கள் கட்டாயப்பணம் செலுத்தித்தான் தீரவேண்டும். அரசர் வாழ அந்தணர் செழிக்க நீ 10000 கொடு, 5000 கொடு" எனக் கூறினான் திவான் ஜெயந்தன் சங்கரன் நம்பூதிரி.

திருவாங்கூர் சரித்திரத்திலேயே முதன் முதல் திவானாக ஒரு நம்பூதிரி (கேரள பிராம்மணர்) ஆன பெருமை இவனையே சாரும்! வெள்ளைக்காரர்கள் தான் உப்புவரியை முதன் முதல் போட்டார்கள் என்று நாம் நம்பிக் கொண்டு வந்திருக்கிறோமே இதுவரையிலும், இதைப் பொய்யாக்கினார் இந்த நம்பூதிரி! திருவாங்கூர் சமஸ்தானத்தில் உப்பு வரியை முதன் முதல் போட்டு வெள்ளையன் மூளைக்கு முன்னாள் தன் மூளையை வைத்துக் கொண்டு விடுகிறார் இந்த நம்பூதிரி! மக்கள் இந்த உப்பு வரியை எதிர்த்துப் போராட்டம் நடத்தினார்கள், வெள்ளைக்காரர்களை எதிர்த்து காந்தியார் நடத்தியதுபோல! கலங்கினானில்லை நம்பூதிரி! அரண்மனையில் சின்னஞ்சிறு அரசன் - பலராம வர்மன்-வயது 16! போதாதா, தகுதி திறமை பெற்ற திவானுக்கு! ஏராளமான பெண்கள் நிரப்பப்பட்டார்கள் திவானின் அரண்மனையில்! பொன்னையும் மணியையும் வாரி வாரி இறைத்தான்! கஜானா காலி! எவ்வளவு வரி போட்டும் பணம் திரளாததைக் கண்ட நம்பூதிரி பணம் படைத்தோரை மிரட்டினான் படை வரிசையைக் காட்டினான்-பயங் காட்டினான்!

"தாருங்கள்-நாடு தந்தது செல்வம். வாழ்கிறீர்கள் பெருமையோடு! நாடு வேண்டுகிறது, நாட்டுக்கு தாருங்கள்"-என்றான் தன் உயர்ந்த புருவங்களை நிமிர்த்தி கண்களை சிவக்கச் செய்து!

மறுத்துப் பயன்! ஆண்டவன் பெயரை சொல்லி அரசன், அரசனால் ஆக்கப்பட்டவன் திவான்! அதுவும் பூதேவராகவே திவான் இருக்கிறபோது மறுக்கயாரால் இயலும்?

அந்தக் கூட்டத்திலே எழுந்தான் ஒரு இளைஞன். அவனைக் கூர்ந்து கவனித்தான் திவான் நம்பூதிரி.

'நீ 3000 ரூபாய் தரவேண்டும்.'-ஆணை பிறந்தது! ஏன் தர வேண்டும், நம்பூதிரியின் மைனர் விளையாட்டுக்கும் வீண் செலவுக்கும் நாமா உதவ வேண்டும் என்று இளைஞன் எண்ணினான்!

"நானா? கேட்டபோது வரி தந்திருக்கிறேன், வரிமேல் வரி. உப்புக்குக்கூட வரி! நாட்டுக் குடிகளுக்கு வசதி செய்யவே தான் அரசாங்கம் இருக்கிறதே தவிர வழிப்பறி செய்ய அல்ல!"-என்றான் அந்த வீர இளைஞன்!

கனைத்தான் நம்பூதிரி! யாருமே சொல்லாத பதில்! ஆயிரம் செல்வர் கூடி நின்ற இடத்தில் அவமானப்படுத்திவிட்டான் இந்த சிறுவன்! ஆனால் தோள்வலிமையினாலே அரசு கட்டிலிலே வீற்றிருக்கிற அந்த பெருமை பெற்றவனல்ல இந்த சங்கரன் நம்பூதிரி! எங்கோ கிடந்த நாடோடி, அரச குடும்பத்தின் சிநேகத்தை பெற்றான். கொஞ்சம் கொஞ்சமாக அரசு நடவடிக்கைகளில் பங்கு கொண்டான். அந்த சமயத்தில் திவானாக இருந்தவன் ராஜ கேசவதாஸ்! திப்பு சுல்த்தானை சீரங்கப்பட்டினப் போரிலே முறியடித்து அதன் ஞாபகமாக திப்புவின் தங்கப் பல்லக்கையும் வாளையும் திருவனந்தபுரத்திற்குக் கொண்டுவந்து சேர்த்து பெருமை பெற்றவன். கொஞ்சம் கொஞ்சமாக ஆசை எழும்பிற்று இந்த நம்பூதிரிக்கு. கேசவ தாசோ வீரன்-அவனை நட்பு கொண்டான். ஆலோசகனாக அமர்ந்தான். ஒரு நாள் இந்த கேசவதாஸ் திருவிதாங்கூரின் பெருமையை காப்பாற்றித் தந்த தீரன், ஆல்வாய் போரிலே திப்புவை துரத்தியவன் விஷமிடப்பட்டு செத்துக் கிடந்தான்! யாரால் விஷமிடப்பட்டான்-ஜெயந்தன் சங்கரன் நம்பூதிரியை தவிர வேறு யாருக்குத் தெரியும்?

> கிழக்கிந்தியக் கம்பெனி என்ற பெயரில் வெள்ளைக்காரர்கள் அடியெடுத்து வைத்து நாடுபிடிக்கத் தலைப்பட்டபோது, சிவகங்கைச் சீமையில் உலவிய மருதுசகோதரர்களைப்போல், பாஞ்சாலங்குறிச்சி மண்ணில் முரசு கொட்டிய ஊமைத்துரையைப் போல் கேரளநாட்டில் விடுதலை கீதம் பாடியவன் வீரன் வேலுத்தம்பி. தென்னாட்டு வரலாற்றின் கீர்த்தியை உணர்ந்து வெள்ளையரோடு போர்புரிந்து பிணமான வீரன் அவன். அவனுடைய வரலாற்றை, கழகத்தின் சிறந்த சொற்பொழிவாளரும், முன்னணி வீரர்களில் ஒருவரும், தஞ்சைமாவட்ட தி. மு. க. செயலாளருமான என். **எஸ். இளங்கோ** அவர்கள் இங்கே வடித்துக்கொடுத்திருக்கிறார்கள். உணர்ச்சியூட்டும் சரித்திரம்-உயிரோட்டமுள்ள தமிழ் நடை.
>
> **[ஆ-ர்.]**

இந்த நம்பூதிரி திவானாக ஆன கதை இதுதான்: தன் கண் முன்னே இந்த பழைய கதை நிழலிட்டுக்கொண்டு நின்றது. எதிரே பார்த்தான் 18 வயது நிரம்பாத சிறுவன்-மீசை இன்னும்கூட அரும்பவில்லை. அவமானப்படுத்தி விட்டானே என உள்ளம் குமுறினான்!

'வேலுத்தம்பி! நீ 3000 ரூபாய் செலுத்தித்தான் தீர வேண்டும்! இது அரச கட்டளை! மறுத்தால்..."என்றான். கண்களிலே சிவப்பேறிற்று; புருவம் எழும்பி பின் தணிந்தது!

யோசித்தான் வேலுத்தம்பி! இந்த நாசகாலனை நேரே எதிர்க்க முடியாது! உயர்ந்த மதில்-உருவிய வாளுடன் வீரர்கள்! தலையை எந்த சமயத்திலும் உருட்டத் தயாராக நிற்கும் யானைகள்! இளைஞன் என்ன செய்யமுடியும்?

'மூன்று நாள் தவணை! மூவாயிரம் என்ன, 'முப்பதினாயிரம் தருகிறேன்" என்றான்.

சொந்த ஊருக்குப் போனான். பயணம் சொல்லிக்கொண்டான்! வேணாடு முழுவதும் சுற்றினான். மூவாயிரம் ரூபாய் திரட்ட அல்ல, மூவாயிரம் வீரர்கள் திரட்ட! வாளும் வேலும் ஏந்தினர். உப்பு வரியினாலும் கட்டாய வசூலினாலும் உள்ளம் வெதும்பி நின்ற வேணாட்டு குடிகள் எழுந்தனர்! திருவனந்தபுரம் கோட்டைக்கு வெளியே வாக்கு கொடுத்தபடியே மூன்றாம் நாள் போர் முரசு கொட்டினான்! வீரர் அணி வகுப்புக்குத் தலைமை தாங்கினான்-வீணர் கொட்டம் அடக்க!

என்ன செய்வான் சின்னஞ்சிறு மன்னன்? வேலுத்தம்பியை அழைத்தான் என்ன தேவை எனக் கேட்டான்!

வேலுத்தம்பி கூறுவான் :—அரசே ஆளத்தெரியாதவனை திவானாக்கினாய். எவ்வளவு வரி தந்தோம். முன்னாள் ராஜா கேசவ தாஸுக்கு தந்த வரியை விட அதிகம்! உப்பு வரி வேறு! முடியாது எங்களால், தரமுடியாது-என்றான் வேலுதம்பி!

திவானைத் தண்டிக்க பொது மக்களைக் கேட்டான் தளவாய் வேலுத்தம்பி—என்ன தண்டனை கொடுப்பது என்று? அவர்களின் இச்சைப்படியே இரண்டு காதுகளும் அறுக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டான், இந்த ஜெயந்தன் சங்கரன் நம்பூதிரி!

மக்கட் சக்தியை திரட்டிக் காட்டிய தளவாய் வேலுத்தம்பியை திவானாக அங்கீகரித்தான் அரசன். கஜானாவை திறந்தான்-காலியாகிக் கிடந்தது அது!

இந்த சமயத்தில் கும்பினியாருக்கு ஆண்டொன்றுக்கு நான்கு லட்சம் ரூபாய் வேறு கப்பம் செலுத்தியாக வேண்டும்! கொடு கப்பம் எனக் கேட்டு நின்றனர் கும்பினியார்! எங்கிருந்து கொடுப்பான்? நாட்டு நிர்வாகத்திற்கே பணமில்லாத போது கம்பெனியாருக்கு எங்கிருந்து கொடுக்கமுடியும்?

கும்பினியார் என்ன நமக்கு காவல்? வீரநாயர்கள் வாழும் இந்த நாட்டில் காவலுக்கென்ன குறைவு? நம்பூதிரி திவானாக இருந்த காலத்தில் ஏற்பட்டிருந்த பயம் வேலுத்தம்பி காலத்தில் நீங்கிவிட்டிருந்தது! பெண்கள் வீதிகளில் படுத்துத் தூங்குவார்களாம் நிறைந்த நகைகளுடன்! வேலுத்தம்பி பெயரை கேட்டு மறைந்துவிட்டனர் திருடர்கள்! இப்படிப்பட்ட நல்லதம்பியின் ஆட்சியில் கம்பெனியின் காவல் எதற்கு? நாம் ஏன் நான்கு லட்ச ரூபாய் தண்டமாக அழவேண்டும் என்றான்!

கும்பினியாரோ நாலு லட்சம் போதாது கொடு எட்டு லட்சம் என்றனர்! வேலுத்தம்பி பார்த்தான். நாட்டிலே மறுபடை திரட்டினான். மக்கள் சக்தியை திரட்டுவது அவனுக்கு ஒன்றும் பிரமாதமான காரியமல்ல! வேலுவின் ஆணையை ஏற்க ஆயிரமாயிரம் வீரர்கள் நின்றனர்! கோட்டையைப் பலப்படுத்தினான்-கொத்தளங்களை செப்பனிட்டான் வேலையும் வாளையும் கூர்மைப் படுத்தி-போர்! போர்! போர் ஒன்றுதான் வழி என முழங்கினான்.

தரமுடியாது கப்பம் உன்னாலானதைச் செய்துகொள் எனக் கூறிவிட்டான் தளவாய்!

இந்தத் தளவாயின் தம்பி ஓடிவந்தான். பெயர் அனந்தன் பத்மநாபன் தம்பி! பல கூறினான்.

"வேண்டாம் அண்ணா இந்த விபரீதம்! வெள்ளையர் மிகப் பலர். படை பலம் மிகப் பெரிது. குண்டு மருந்தும் துப்பாக்கியும் பீரங்கியும் அவர்களிடம் ஏராளம். வேண்டாம் அண்ணா-பணிந்து போவதே மேல்! பணமில்லையானால் பணம் கொடுக்க மக்கள், நான் வாங்கித் தருகிறேன்" என்றான்.

"நீ பணத்தைக் கொடுக்கவில்லை, கும்பினியாருக்கு-கேரள நாட்டின் மானத்தை விலை கூறுகிறாய் தம்பி! முடியாது, என் உயிர் உள்ளவரை இந்த திருவாங்கூர் கப்பம் கட்டச் சம்மதிக்க மாட்டேன்"—என்றான்.

"வீணாய் கெட்டுப்போகாதே! தென்னாடு முழுவதையும் தன்னதாக்கி கொண்டிருக்கின்றனர் வெள்ளையர்! எதிர்த்து நிற்கமுடியாது அவர்களை! ஏன் வீண் வம்பு?"

"தென்னாட்டவன் கோழை என்பதை கேட்க விரும்பவில்லை. வேலு எதிர்த்தான் - போரிட்டான் - செத்தான் என்பதைத் தான்கேட்க விரும்புகிறேன்-நாட்டுக் குடையவர்கள் நாம், பரங்கியல்ல! அவர்களிடம் மண்டியிட்டு அடிமையாக வாழ்வதை விட எதிர்த்து நின்று செத்துவிடுவதே மேல் என்று முழங்கினான்-கோட்டை வாயிலிலே நின்றனர் எண்ணாற்ற வீரர்கள்.

"தாய் நாடு-இதைக்காக்க எங்களுயிரைத் தருவோம்" என முழங்கினர். இந்தப் படை வரிசைக்கு தலைமை தாங்கி நின்றவன் வைக்கம் பத்மநாப பிள்ளை. வேலுத்தம்பி தளவாய்க்கு உற்ற நண்பன் கட்டளைக்குக் கீழ்படிந்து தூக்கு மேடை ஏறவும் தயங்காதவன்!

ஆலப்புழை மிளகு வியாபாரத் தலைநகரம். அங்குதான் மிளகு வியாபாரத்தில் பணம் திரட்டும் வெள்ளையர் கூடி நின்றனர். கோட்டை கட்டியிருந்தனர் கும்பினியார். கும்பினியாருக்கு மிளகுப் பண்டகசாலை ஏராளம். கப்பல் பல துறைமுகத்தில் மிளகேற்றி நின்றன. வேலுத் தம்பியின் வீரமுழக்கம் கேட்டு மருண்டனர் வெள்ளையர்! பண்டங்களை ஏற்றினர் மரக்கலங்களில், பீரங்கி

— 11ம் பக்கம் —

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்ருல்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 4 | 1—2—58 | இதழ் 29

ஓலம்! ஒப்பாரி!! அழுகை!!!

நாட்டில் தங்கள் பெயர் நிலவிக் கொண்டிருக்க யார் யாரோ என்னென்ன செயல்களிலோ ஈடுபடுகிருர்கள்! நாடு மறந்த ஒருவரை 'அவர் சாகவில்லை; மிக விரைவில் குதிக்கப்போகிருர்' என்பார்கள்.

வேறு சிலர் 'மாறு வேடத்தில் வந்து மக்களைக் கவனிக்கப் போகிறேன்' என்பார்கள்.

இன்னும் சிலர் இருக்கிருர்கள், அவர்கள் பத்திரிகைச் செய்திக்காகவே எதையாவது பேசுவார்கள்.

-இப்படிப் பல தரப்பட்டவர்கள் தமிழ்நாட்டு அரசியலில் இருக்கிருர்கள். ஆனுல் நாடு இவர்களையெல்லாம் அந்தந்த தினத்தோடு மறந்துவிடுகிறது.

கடந்த ஒரு வார காலமாக அறிஞர் அண்ணு அவர்களைப்பற்றிய செய்திகளே தினத்தாள்களில் இடம் பெறுகின்றன. மற்றவர்கள் இதை எதிர்பார்த்து 'வாயை'த் திறக்கிருர்கள். அண்ணு அவர்களுக்கு இவையெல்லாம் எதிர்பாராமல் குறுக்கிடுபவையாகும். சட்ட சபைக்குப் போனுல் என்ன நடந்துவிடப் போகிறது என்று பேசிய பெரியார் அவர்கள் இந்த நேரத்தில் வெளியிலிருந்து பார்க்கமுடியாமற் போனது மிகவும் வருந்தத்தக்கதே! மகிழமுடியாவிட்டாலும் அவரும் சேர்ந்துகொண்டு திட்டவாவது வாய்ப்புக் கிடைத்திருக்கக் கூடும்.

கடந்த 23-1-58ம் தேதியன்று இலட்சுமிபுரம் யுவர் சங்கத்தின் சார்பில் அறிஞர் அண்ணுவும், ஆச்சாரியாரும் மொழிப் பிரச்சினை குறித்து பேசினுர்கள்.

இடுக்குகள் மிகுந்த அந்த இடத்தில் ஆயிரக்கணக்கில் மக்கள் கூடியிருந்து சொற்பொழிவினைக் கேட்டனர். அந்தப் பேச்சை வைத்துக்கொண்டு 26-1-58 ம் தேதியன்று கடற்கரையில் 'விமர்சனம்' செய்தார்கள் மந்திரிகள்.

எப்போதுமே, விமர்சனம் செய்வோர், விமர்சிக்கப்படுவரைக் காட்டிலும் எல்லாத் துறையிலும் வல்லவர்களாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் விமர்சனத்தில் சுவை இருக்கும் ஆனுல் அன்றையத்தினம் கடற்கரையில் விமர்சனம் செய்தவர்கள் என்றென்றும் விமர்சனத்திற்குக் கருப்பொருளாக இருக்கவேண்டியவர்களேயன்றி விமர்சகர்கள் அல்லர். எல்லா மந்திரிகளுமே 'அண்ணுத்துரை அண்ணுத்துரை' என்று புலம்பியிருக்கிருர்கள். பெயரை உச்சரித்தாலே பாவம் என்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள் புனிதமான அவர்களின் குடியரசு தினத்தன்று 'அண்ணுத்துரை அண்ணுத்துரை' என்றே நிமிடத்துக்கு நிமிடம் பேசியிருக்கிருர்கள். குடியரசுக்கும் அண்ணுவுக்கும் எவ்வளவு தொடர்பு? வாழ்க வசை 'பாணர்'கள்!

இந்தியா தற்கொலை செய்துகொள்ளப்போகிறது என்று சத்தியமூர்த்தி சொன்னதாக - செங்கல்வராயன்.

தி. மு. க. பேச்சில் மயங்கிவிடக் கூடாது-கக்கன்.

இவர்களெல்லாம் கிளிப்பிள்ளைகள். தேனும்பேட்டையில் சொல்லிக் கொடுப்பதை கடற்கரையில் பாடம் ஒப்புவிப்பவர்கள். தனித் தமிழ் நாடு பிரியக்கூடாது என்று இவர்கள் பேசினுர்கள். பக்தவத்சலம் இருக்கிருரே, அவர் என்ன பேசினுர் தெரியுமா? நாட்டைப் பிரித்துவிட்டால் பர்மா, மலேயா, இலங்கை பம்பாய் - இங்குள்ள தமிழர்களை என்ன செய்வார்கள், என்று பேசியிருக்கிருர். காங்கிரஸ் சுதந்திர அரசாங்கத்தில் வெளிநாட்டுத் தமிழர்களுக்கெல்லாம் அள்ளி அள்ளிக் கொட்டுவதுபோலவும் தனித் தமிழ்நாடு பிரிந்துவிட்டால் அதெல்லாம் நிறுத்தப்பட்டு விடுவதுபோலவும் அவர் பேசுகிருர். கேவலம் இவர்களெல்லாம் 'மந்திரி' என்ற பட்டுக் குஞ்சங்களை வேறு கட்டிக்கொண்டு அலைகிருர்கள்.

சுப்பிரமணியம்-இவர் ஒரு சுரக் குடுக்கை. ஒன்றுமில்லாததையெல்லாம் எடுத்து வைத்துக்கொண்டு 'கடா கடா! குடு குடு' என்று ஆட்டிக்கொண்டிருப்பவர். இந்தி விஷயத்தில் அண்ணு இவரிடம் மயங்கிவிட்டாராம்! இந்தியைப் பொறுத்தவரையில் இந்தியத் துணைக் கண்டத்தில் மூன்ருவது முகாமாக அமைந்திருப்பது தி. மு. க. ஒன்றுதான் என்பதை அண்ணு அவர்கள் எப்போதோ அறிவித்துவிட்டார்கள். இந்த உண்மையைத் தி. மு. க. அல்லாதவர்களெல்லாம் புரிந்துகொண்டார்கள்; மதி மந்திரி-நிதி மந்திரிக்குத்தான் புரியவில்லை. ஆச்சாரியார் அவர்களோடு கலந்துகொண்ட கூட்டத்திலேகூட அண்ணு அவர்கள் தெளிவாகத் தெரிவித்துவிட்டார்கள். சூசகமாகக் கூடக் கூறவில்லை; காமராசர் போன்ருர்க்கும் புரிகின்ற வகையில் பேராசிரியரைப்போல மிக அழகாகப் பிரித்துப் பிரித்துப் பேசினுர். அதைக்கூட இந்த மந்திரிகள் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை பரிதாபம்!

ஆச்சாரியார் அண்ணுத்துரைக்கு நல்ல பதில் தந்துவிட்டார் என்று மனதுக்குள்ளேயே பெருமைப்பட்டுக் கொண்டிருப்போர் அண்ணுவின் சொற்பொழிவைக் கூர்ந்து கவனித்தால் உண்மை தெரியவரும்.

இந்தி எதிர்ப்பில் தென்னுடு வெற்றி பெற்றுவிட்டால் நாட்டுப் பிரிவினைக் கொள்கை ரத்தாகிவிடும் என்று எவராவது கருதினுல் அது அவசர முடிவாகும்.

இதைச் சென்னை மந்திரிகள் புரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் அண்ணுவைப் புரிந்து கொள்ளமுடியும்.

தி. மு. க. இந்தியை எதிர்க்கிறது. ஏன்? இந்தி அந்நிய மொழி என்பதற்காக! இதுதான் தி. மு. க.வின் மொழிக் கொள்கை! ★

ஏ. வி. இராமன் மறைவு

வழக்கறிஞர் வி. பி. இராமன் அவர்களின் தந்தை திரு. ஏ. வி. இராமன் அவர்கள் 29-1-58 பிற்பகல் 3-30 மணிக்கு, இயற்கையெய்தினுர் என்ற செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேம்.

திரு. ஏ. வி இராமன் தமிழ்மொழியில் சிறந்த பயிற்சியும், மொழி வளர்ச்சியில் தணியா ஆர்வமும் காட்டிவந்தவர். தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தின் துணைத்தலைவராக அவர் இருந்துவந்தார். 'தமிழ் வளரவேண்டும் - அதிலும் நல்ல தமிழ் வளரவேண்டும்' என்பதில் திரு. இராமன் காட்டிய ஆர்வம் போற்றுதற்குரியது. தமிழ்ச்சொல் வழக்கு, தமிழ்ப் பழமொழிகள் தொகுப்பு, இவைகளில் அவர் நீண்டகாலம் உழைத்திருக்கிருர். அவர் ஆரம்பித்த ஆங்கிலம்-தமிழ் அகராதி இன்னும் முடிவு பெறவில்லை. இறக்கும்வரை, அந்த வேலை அவரது கவனத்தைப் பெரிதும் கவர்ந்திருந்தது.

ஏ. வி. இராமன் அவர்கள் தான் லண்டனிலுள்ள ராயல் சானிடரி என்சினீயரிங் சொசைட்டிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர் ஆவார்.

29-1-58 பிற்பகல் 3 மணியளவில், இருதய நோய் பலமாக வந்து, அவருடைய தம்பியும் பிரபல டாக்டருமான ஏ. சீனிவாசன் அவர்களால் உடனடியாக மருத்துவ வசதிகள் செய்யப்பட்டும் அரைமணி நேரத்துக்கெல்லாம் அவர் உயிர் பிரிந்துவிட்டது. அவரருகில் அவருடைய மனைவியார், தோழர் வி. பி. இராமன் மனைவியார் இருந்தனர்.

திரு. ஏ. வி. இராமனின் மறைவு கேட்டு அவருடைய இல்லத்திற்கு பல நண்பர்களும், கழகத் தோழர்களும் வந்து சேர்ந்தனர். அவர்களில் முக்கியமாக சி. இராசகோபாலாச்சாரியார், ஆக்டிங் சீப் ஜஸ்டிஸ் பி. இராசகோபாலன், அட்வகேட்-ஜெனரல் வி. கே திருவேங்கடாச்சாரி, எஸ். ஒய். கிருஷ்ணசாமி, ஏ. சுப்பையா, காசா சுப்பா ராவ் முதலியவர்களும், கழகத் தோழர்களில் அண்ணு, நெடுஞ்செழியன், என். வி. நடராசன், அன்பழகன், கண்ணதாசன், ஆசைத்தம்பி, ஏ. கோவிந்தசாமி, எம். பி. சுப்பிரமணியம், ஆர். தர்மலிங்கம், செழியன், சேலம் இராசாராம், டி. வி. நாராயணசாமி, பொன்னுவேல், மாறன், முல்லை-சக்தி, எம். ஜி. இராமச்சந்திரன், களம்பூர் அண்ணுமலை, சி. வி. இராசகோபால் முதலியவர்கள் வந்து ஆறுதல் கூறியதுடன், 7 மணிக்குமேல் கிளம்பிய கடைசிப் பயணத்தில் கலந்துகொண்டு இடுகாட்டில் தமது இறுதி வணக்கத்தைத் தெரிவித்தனர்.

திரு. ஏ. வி. இராமனின் பிரிவாற்ருது துயருறும் வி. பி. இராமனுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் நமது அன்பு கலந்த ஆறுதலை அளிக்கின்ருேம்.

கேள்விப் பெட்டி

பன்மொழிப்புலவர் பதில் தருகிறார்

நாரண. திருவிடச்செல்வன்,
மலாயா.

(அ) மலாயாவிலே கெட்டா (KEDAH) என்பது ஒரு மாவட்டம். வரலாற்றில் காணப்படும் 'கடாரம்' அல்லது 'காழகம்' என்னும் சொல்லுக்கும் இன்று இவண் வழக்கிலுள்ள 'கெட்டா'வுக்கும் தொடர்பு உண்டா? 'கடாரம்' என்பது எந்த நாடு?

(ஆ) 'வடமொழியின் துணையின்றித் தனித்து இயங்கவல்லது தமிழ்' என்று கால்டுவெல் என்ற அறிஞர் கூறியுள்ளதாக அறிந்தேன். தங்கள் கருத்தை அறிய வேட்கை.

(இ) பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தாது தனித்தமிழில் நாம் எழுதவும் படிக்கவும் வேண்டும் என உன்னுவது போல பிறநாட்டினரும் எண்ணுகின்றனரா? விளக்கம் தர விழைகிறேன்.

(அ) தொடர்பு உண்டு. பெருஞ்சோழராகிய சோழப் பெரும் பேரரசர் ஆட்சி நாட்களில் கடாரப் பேரரசு மலாயா முழுவதையும் மட்டுமன்றி, இன்று சுமாத்ரா என்று அழைக்கப்படும் பண்டைச் சாவகம், இன்றைய சாவா, கிழக் கிந்தியத் தீவுகள், தென்பர்மா, அந்தமான் நிக்கோபார்த்தீவுகள், சயாம்; இந்து-சீனா ஆகிய நாடுகள் அனைத்தையும் உட்கொண்டது. இன்று அந்தப் பேரரசின் எல்லையையே நாம் தென்கிழக்காசியா என்கிறோம். இதன் தலைநகரம் சுமாத்ரா தீவிலுள்ள பாலம்பாங் என்ற நகரமே. அதனை ஆண்ட மரபினர் சிர்விசய சிர்மாறக்குடியினர் ஆதலினால் நகரம் அந்நாளில் சிர்விசய நகரமென்றும் பேரரசு சிர்விசியப் பேரரசு என்றும் அழைக்கப்பட்டன.

தமிழர் மலாயாவுடனும் இப்பேரரசுடனும் கொண்ட தொடர்பில் கடாரம் அல்லது கெட்டா என்ற துறைமுகப்பட்டினம் பேரிடம் வகித்தது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னிருந்த அந்நகரில் தமிழக வணிகர் மிகப் பெரும்பாலராகச் சென்று தங்கி, உரிமை நகராட்சிப்பத்திரம் பெற்று நகர்க் குடியாட்சி நடத்தி வந்தனர். தமிழர் கடார வாழ்வில் நடுவிடம் வகித்து, தமிழர் கடாரத்தில் இறங்கும் முதல் துறைமுகமாகக் 'கெட்டா' விளங்கியதனால், அதன் பெயரே தமிழரால் அந்நாளில் பேரரசு முழுமைக்கும் வழங்கப்பட்டது. கடாரப் பகுதியில் அந்நாள் நெய்து ஏற்றுமதி செய்யப்பட்ட உருவ கைத்துணியே பண்டைத்தமிழில் 'காழகம்' என்ற பெயர்பெற்றிருந்தது.

(ஆ) தாங்கள் அறிந்த செய்தி முற்றிலும் உண்மை. ஆனால் வடமொழியின் துணையின்றி மட்டுமன்று, வேறெம்மொழியின் துணையுமின்றி அது இயங்கவல்லது. அவ்வாறு தமிழ் மட்டுமல்ல, உலகின் எல்லா மொழிகளும் இயல்பாக இயங்கமுடியும், இயங்கியிருக்கலாம், இயங்கவேண்டும். ஆனால் ஏதோ போதாக்குறையால் உலகின் மிகப் பெரும்பாலான மொழிகள் நெடுங்காலமாக அவ்வாறு இயங்காமல், அவ்வாறு இயங்கும் ஆற்றலையும் படிப்படியாய் இழந்துவருகின்றன. மறந்து பட்ட உலகின் மிகப் பழமை வாய்ந்த மொழிகள் பலவும் (எகிப்தியா, சால்டியா, சுமேரிய மொழிகள்), இறந்து பட்ட பழம் பெருமையுடைய மொழிகளும் (சமஸ்கிருதம் கிரேக்கம், இலத்தீனம் முதலியவை) உயிர்ப்பிழந்தோ உயிரற்றோ போனதற்குத் தமிழர் பேணிய இத்தமிழ்ப்பண்பை அவை பேணாதிருந்ததே காரணம்.

தமிழ்போன்ற தனித் தியங்கும் ஆற்றலுடைய மொழியின் வளர்ச்சி உயிர் மரத்தின் அல்லது உயிர்ச் செடியின் வளர்ச்சி போன்றது. இங்கே உயிர் மரம் என்பது ஆல மரம்போன்ற மரங்களை, விதை மூலம் வளரும் வளர்ச்சியை கிழவாமலே விழுதுவிட்டுப் பரவிப் புது வளர்ச்சியும் இயல்பாக உடைய சாவா மரங்கள் அவை. கொடிகளிலும் இதுபோன்ற இரு தன்மை உடையது தாமரை. அதன் அடித் தண்டு ஒருபுறம் சிதையும் தோறும் மறுபுறம் குருத்துவிட்டு புதுச்சேறு கிடைக்குமிட நோக்கிப் பரந்து கொண்டே இருக்கும். அதே சமயம் அது விதைமூலம் புத்திடத்தில் புதுப் பயிராக வளரும் தன்மையும் உடையது. தமிழ்ப் பண்புக்கு மாறான செயற்கைப் பண்புடைய மொழிகள் நெற் பயிர், கரும்புப் பயிர், ஒட்டு மரங்கள் ஆகியவற்றின் தன்மைகளையோ, நாணல் செய்த பூங்கொடிகளையோ தத்தம் இயல்புக்கேற்றபடி ஒப்பவை. சில நெற் பயிர்போல வித்தினால் கரு முயற்சியுடன் வளர்க்கப்பட வேண்டியவை, முயற்சி சிறிது குன்றிய அன்றே வாழ்வு அழிந்துவிடும். தன்னியல்பாக வாழ முடியாதவை. சில கரும்புப் பயிர்போல, பூவும் காயும் தரும் ஆற்றலிழந்து, வேறொருவரால் கனு முறித்துப் பயிர் ஆக்கப்படும் தற்காலிக கால வாழ்வுடையவை. சில ஒட்டு மரங்கள் போலக் கலப்பு மொழியாய், ஒரு நாகரிக இனம், ஒரு காட்டு முரட்டு இனம் ஆகியவற்றின் இணைவால் சில காலம் பகட்டான வாழ்வு பெறுபவை. இலத்தீன் கிரேக்க மொழிகளின் தன்மை இது. மிகச் சில சமஸ்கிருதத்தைப்போல தாளால் செய்யப்பட்டு மணம் தெளிக்கப்பட்ட பூங்கொடியாகத் தற்காலிக அழகும் மணமும் காட்டி உள்ளுயிரில்லாது சின்னாள் இயங்குபவை.

தமிழின் தனித்தியங்கும் பண்பைக் கண்ட பின்னரே- அதை வளர்க்க ஆசிரியர் மறைமலையடிகளார் துவக்கிய தனித் தமிழின் ஆற்றல் கண்ட பின்னரே-மேலை நாட்டார் தம் மொழிகளிலும் அப்பண்பை வளர்க்க எண்ணி அடிப்படை மொழி' இயக்கம் Basic Movements) கண்டுள்ளனர். அடிப்படை மொழி இயக்கத்தின் மூலம் மேலைநாட்டார் ஆங்கில முதலிய மொழிகளுக்கு செயற்கையாக அளிக்கக் கருதும் பண்பு தமிழுக்கு இயல்பாகவே அமைந்துள்ளது. அத்துடன் மேலை உலகின் அடிப்படை மொழி இயக்கம், மேலை மொழிகளின் தவறான அடிப்படையைச் சரிசெய்ய முனையாமல், அறிவற்ற, உயிரற்ற அத்தவறான அடிப்படையின்மீதே அறிவார்ந்தபுதுக்கட்டடமெழுப்ப முயல்கின்றது. ஆனால் ஆசிரியர் மறைமலையடிகளின் தனித்தமிழ் இயக்கம் உயிரார்ந்த அறிவார்ந்த தமிழ் மொழிமீது புத்துயிர், புத்தறிவு கொண்டு எழுப்பப்படும் புத்தாக்கக் கட்டடம். அடிப்படையியக்கம் மறைமலையடிகள் பெயர் கூறாமல், அவரைப் பின்பற்றாமல் நடப்பதனாலேயே இந்த அரைகுறைத் தன்மை உடையது. அவர் அடிச்சுவட்டைப் பின்பற்றினால், மேலை மொழிகள் மட்டுமன்றி உலகின் எல்லா மொழிகளுமே தமிழின் சாவாப்பண்பில் பங்குகொள்ள முடியும். ஆனால் ஏற்கெனவே அப்பண்பில் வளர்ந்த தமிழும், அத்தொடர்புடைய தமிழின மொழியும் அவற்றுடன் அடிப்படையிர்த் தொடர்புடைய இந்திய மொழிகளும் உலகின் ஏனைய மொழிகளை இவ்வகையில் முந்திக்கொள்ள இடமுண்டு.

அடிப்படை மொழி இயக்கத்தின் மூலாதாரத் தத்துவங்களாவன:

1. மொழி பேசும் மக்கள் மூளையில் எளிதில் இடங்கொள்ளத் தக்கபடி மிகக் குறைந்த ஆனால் வளமான சொல்மூலங்கள்மீது மொழியின் எல்லாச் சொற்களும் கட்டமைக்கப்பட வேண்டும். இப்படிப் படைச்சொற்களை சுற்றி எல்லாச் சொற்களும் குடும்பம் குடும்பங்களாக, குடும்பத் தொகுதி தொகுதிகளாக வகைப்புடுதல் நலம்.

2. அடிப்படைச் சொற்கள் தொன்றுதொட்டுத் தாய்மொழியிலேயே தனித்து வளர்ந்த தூய தமிழ்ச் சொற்களாயிருக்குமளவுக்கே அவை தாய்மொழியை வளர்ப்படையாக இருக்கும் ஏனென்றால் உயிருள்ள மரத்துக்குள் உயிருள்ள கிளையும் அதற்குள் உயிருள்ள இலையும் பூவும் காயும் போல, உயிருள்ள மொழியின் வளர்ச்சிக்குள்ளாக உயிருள்ள சொற்கள் தொடர்புகள் மரபுகள் வளர்பவை. மொழியில் ஒரு சொல்லின் உயிர் ஆற்றலின் உயிர்க்கூறு அது தாய்மொழியிலேயே பிறந்ததனால் ஏற்படுவது. உயிர்வளம் அல்லது வளர்ச்சியாற்றல் அது அம்மொழியினத்தின் உள்ளத்தில் எவ்வளவு நீடித்தகாலம் ஊறியது என்பதைப் பொறுத்தது.

3. அடிப்படைச் சொற்கள் இனத்தின் தொடக்ககால இனவாழ்வின் சின்னங்களும் அனுபவ அறிவின் தடவானும் ஆகும் அவற்றின் உயிர்ப்பு இதையே பொறுத்தது. அவை துணைச்சொற்கள், சொற்கூட்டுக்கள், தொடர்கள், மரபுரைகளாக வளர்வதற்குரிய உயிர்வளம் அவற்றின் நெகிழ்ச்சித்தன்மையேயாகும். தற்கால உலகில் தமிழும் ஆங்கிலமும் இத்தகைய நெகிழ்ச்சித் தன்மையை உச்ச அளவில் பெற்றுள்ளன. ஆனால் மறைமலையடிகளார் வழிநின்று தமிழை ஆய்பவர், அறிஞர் தேவநேயப் பாவாணர் வழிநின்று இலைமறைகாய்போல் இன்று புதைந்து காணப்படும் அதன் உயிர்ப்பண்பில் கருத்துச் செலுத்துவர், ஆங்கிலத்திலும் அது நூறுமடங்கு வளர ஆற்றல் மிக்கதென்று காண்பர்.

தமிழின் அடிப்படைச் சொற்களுக்கு ஒரு தனிச்சிறப்பு - பல ஆராய்ச்சியாளர் காணமுயன்றும் இன்றும் தெளிவாக அறிவுலகம் காணாதிருக்கும் பண்பு - என்று உண்டு. தமிழ் மனித உலகின் முதல் நாகரிக மொழி. **படைப்புக் காலந்தொட்டு இன்றுவரை மனிதஇனம் அடைந்து வந்துள்ள உண்மையான அர வளர்ச்சி முழுவதையும் தன்னலம்கொண்டு இயங்குவது.** ஆகவே இதன் அடிச்சொற்கள் உலகின் எல்லா மொழிகளின் அடிச்சொற்கள் ஆகும். மறைமலையடிகளார் தமிழ்ப்பண்பைப் பின்பற்றுவதன்மூலமும், தமிழ்மொழி தமிழிலக்கியம் பயில்வதன்மூலமும் தமிழன் மட்டுமன்றி மனிதர் யாவருமே தத்தும் தாய்மொழிகளையும் தாய்இனங்களையும் தாய்வீடுகளையும், மனித நாகரிகத்தையும் வளர்க்கப் புத்தம் புது வழிகளை என்றும் புதுவதாகக் காணமுடியும். தனித்தமிழ் இங்ஙனம் தமிழுக்கு மட்டுமல்ல, உலகத்துக்கே உயிர் வளம் அளிப்பது ஆகும்.

(இ) எண்ணுகின்றனர். எண்ணிச் செயலாற்றவும் செய்கின்றனர். வெற்றி கண்டும் வருகின்றனர். இதற்கு 19, 20-ம்நூற்றாண்டுகளில் பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் புது வளர்ச்சி பெற்று வரும் ஆங்கிலம் சான்று. இவ்வாறு எண்ணாமலே இயல்பாகத் தமிழைப் போல இப்பண்பு பெற்றுள்ள மொழிகளும் உண்டு- உலகின் தொல் பழமொழிகளில் சீனமும், புது மொழிகளில் ஜெர்மனும் இதற்குச் சான்றுகள். தமிழ்ப் பண்புக்கு மாறான பண்புடைய இலக்கியத் தொடர்புக்கு ஆளாகாத காரணத்தால், இந்தியாவில் பஞ்சாபியும் ஐரோப்பாவில் உருகிய மொழியும் புது வள வாய்ப்புக்கள் உடையனவாய் இயங்குகின்றன. கிட்டத்தட்டத் தமிழ்போலவே தமிழ்ப் பண்பை மொழியில் மட்டுமன்றித் தேசிய மாற்ற முழுவதுமே பேணும் ஒரே ஒரு தேசிய மொழியினமும் இன்றைய உலகில்உண்டு, அதுவே ஜப்பான் மொழி இனம்.

இவ்வினாவின் முழு விடைவிளக்கமும் முந்திய வினாவுக்குரிய விடையிலேயே காணலாம்.

மறைவு

காரைக்குடியில் கவிஞர் முடியரசன் அவர்களின் தந்தையார் 26-1-58 ஞாயிறன்று இயற்கையெய்திய செய்தி கேட்டுப் பெரிதும் வருந்துகிறோம். கவிஞர் முடியரசன் அவர்களுக்கும் அவரது உறவினர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். [ஆ-ர்.]

மலர்க் கண்ணுள்!

கார் மேகங்கள் சூழ்ந்து வானத்தை முற்றுகையிட்டிருந்தன; இடியின் ஒலி முழவின் ஒலிபோல முழங்கியது; முல்லை மலர்கள் பூத்து வெண்முறுவல் செய்தன; செங்காந்தள் பூக்கள் வெந்தீயாய் விளங்கின; அழகிய தோகையை விரித்து மயிலினங்கள் ஆடின; 'தலைவன் திரும்பி வருவதாகச் சொல்லிப் போன கார்காலம் வந்துவிட்டது; இனியாவது நம் பிரிவுத்துன்பம் தொலையட்டும்' என்று எண்ணி மகிழ்ந்தாள் தலைவி.

பிரிந்து சென்ற தலைமகன் 'வருவான், வருவான்' என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். 'நாளை வரும்; பொழுது விடியும்; வாயிலில் தேர் வந்து நிற்கும்; நாம் எதிரே சென்று நிற்போம்; அவர் வந்து நம்மை ஆரத் தழுவிக்கொள்வார்; அவர் விடும் வெப்பமான மூச்சு நம் முகத்தில் பட்டு மனவெப்பத்தை நீக்கும்' என்றெல்லாம் எண்ணிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் அவள்.

ஆம், அவளுக்கு அந்தக் கற்பனை எண்ணம் ஒன்றுதான் துணைபுரிந்து நின்றது! இல்லையானுல் இரவு பூராவும் அவள் தூக்கமின்றி கழித்திருக்கமுடியாது! மென்மை மேவிய அவள் உள்ளம் வன்மை பெற்று துன்பத்தைப் பொறுத்துக்கொண்டிருக்கவும் இயலாது!

பொழுது விடிந்தது! ஆவலோடு ஓடிவந்து கதவைத் திறந்தாள் அவள்! 'கதவு திறப்பதற்கும் தேர் வந்து நிற்பதற்கும் சரியாக இருக்கும்; அடுத்தபடி அவரோடு சேர்ந்து அணைந்து இணைந்து கொஞ்சி விளையாடுவதற்குத்தான் நேரமிருக்கும்' என்று நம்பித்தான் விரைவாகத் திறந்தாள்!

ஆனுல் அப்படி நிகழ்ந்ததா? இல்லை, தெருவெல்லாம் 'வெருச்' சென்றுதான் இருந்தது! அவள் கால்கள் ஒன்றும் அறியாது செயலற்று நின்றுவிட்டன!

'கீச்சு கிச்சு, கீச்சு கிச்சு' என்று கூச்சலிட்டு சண்டை போட்டபடி மாதுளைமரத்தினின்றும் இரண்டு குருவிகள் முருங்கை மரத்தை நோக்கிப் பறந்தன! அடுத்த விநாடியே பலமான காற்றென்று அடித்தது! 'குவிக் குவிக்' என்ற சப்தத்தோடு குருவிகளிரண்டும் எழுந்தன; ஒன்றையொன்று பின்னிக்கொண்டவைபோலச் சுழன்று சுழன்று பறந்தன; சற்றுநேரத்திற்கெல்லாம் அவள் கண்களினின்றும் அவைகள் விலகிச் சென்று மறைந்தன!

அவைகளைப் பார்த்துக்கொண்டிருந்த தலைவி, மெதுவாக ஒரு மூச்சுவிட்டாள்! தான் எதிர்பார்த்தபடி தலைவனைச் சந்திக்க முடியவில்லை; அந்த இரண்டு குருவிகளாவது பரவாயில்லை. சண்டையிட்டுக் கொண்டாலும் ஒன்றையொன்று விட்டுப் பிரிவதில்லை! இடைநின்று பிறர் பிரித்தபோதும் தனியாகவிட்டுப் பிரிந்துவிடவில்லை! மனிதர்களைவிட பறவையினங்களே எவ்வளவோ உயர்ந்தவை' என்று நினைத்தாள் அவள்!

ஆனுல் மீண்டும் ஒரு நம்பிக்கை! 'இன்று எப்படியும் தலைவர் திரும்பி விடுவார்; இன்னும் கொஞ்ச நேரத்தில் அவரைக் காணமுடியும்' என்று நம்பினுள். அந்த உறுதியான நம்பிக்கையால்தான் அவளுக்கு மாலை வந்ததையும்கூட அறிந்து கொள்ள முடியாமல் போய் விட்டது!

தலைவன் வரும் வழியாகக் கொஞ்சதூரம் சென்று அவனை வரவேற்போம் என்ற எண்ணத்தில் எழுந்தாள். சோலை வழியாகச் செல்லும் அந்தப் பாதையில் சென்றுகொண்டிருந்தாள். அங்கேதான் மாலை மங்கை வந்துவிட்டதன் அறிகுறியாக காட்சிகள் இலங்கிக்கொண்டிருந்தன! ஆம், குளத்திலுள்ள பூக்களை விட்டு வண்டுகள் மரத்தை நோக்கிப் பறந்துகொண்டிருந்தன; அவளைக் கண்ட மானினங்கள் மருண்டு ஓடின; உருக்கி வார்க்கப்பெற்ற செம்பொன் ஆறிக் கொண்டிருப்பதைப் போன்று செவ்வானம் இலங்கிக் கொண்டிந்தது; மேகக் கூட்டங்கள் கவிஞர்கட்கு விருந்தூட்டி மகிழ்வித்தன: அருமையான நேரம்! அழகு மலிந்த நேரம்! களிப்புமிக்க நேரம்! யாருக்கு? இணைந்து வாழும் அமைதிமிக்க காதலர்களுக்கு!

ஆனுல், தலைவிக்கு அது கொலைபுரியும் கொடுமை மிக்க நேரமாகத்தோன்றியது! இல்லை, சித்திரவதை செய்யும் சிறுமையான நேரமாகவே தோன்றியது! 'இந்த மாலைநேரம் வெந்தபுண்ணில் வேலிடுகின்றது' என்று மெதுவாக ஒருமுறை முணுமுணுத்தாள். 'அய்யோ! அடுத்து வருவது இரவு வேளையாயிற்றே! நமது தலைவர் வர இன்றைக்கு நேரமில்லையே! நாளைக்குத்தானே வருவார் போலிருக்கின்றது! இன்னும் கொஞ்சநேரத்தில் நிலமகள் தனது கரிய போர்வையை யல்லவா இழுத்துப் போர்த்திக் கொள்ளப் போகிருள்!' என்றெண்ணியதும் அவள் உள்ளம் துன்பத்தால் வெடித்துவிடும்போல் காணப்பட்டது!

அங்கிருந்து திரும்பினுள். வீடு சென்ருள். அங்கே அவளை வரவேற்றது ஒருமுகம் பார்க்கும் கண்ணுடி. எத்தனையோ நாள் அவள் மகிழ்ச்சியாகத் தன்னை சீர்ப்படுத்திக்கொள்ள உதவிய கண்ணுடிதான் அது. அழகுபடுத்தி ஆனந்திக்கப் பயன்பட்ட அதே கண்ணுடிதான் அன்றும் அவள் கண்முன் நின்றது.

அதனை அண்மிச்சென்ருள் அவள். தன் மாசு படிந்த உருவத்தை ஒருமுறைப் பார்த்துக் கொண்டாள். தன்னையும் அறியாமல் ஒரு நீண்ட பெருமூச்சு எறிந்தாள். அந்த இரேகை கண்ணுடியில் அப்படியே படிந்தது. ஆனுல் மீண்டும் கவனிப்பதற்குள் மறைந்துவிட்டது! மீண்டும் வாயால் ஒருமுறை ஊதிப் பார்த்தாள். முன்னினும் நன்ருகப் படிந்தது இரேகை! ஆனுல் என்னே! இருக்கஇருக்க குறைந்துபோய் மறைந்தே விட்டது!

ஆம், காலையிலிருந்த நம்பிக்கையும், துணிவும், அதனுல் ஏற்பட்ட வன்மையும், 'இன்று தலைவன் வர இனியும் நேரமில்லை; அடுத்து இருள்தான் வரப் போகின்றது' என்பதை எண்ணும்போது மறைந்துவிட்டது; அதுவும் இந்தக் கண்ணுடியில் பட்ட ஆவியைப் போன்றுதான் மறைந்தது! அவள் கொண்ட துணிவு மறைந்தது! துக்கம் நிரம்பியது! உறுதி ஒழிந்தது! உள்ளம் உடைந்தது! நம்பிக்கை அழிந்து நாடி ஒடுங்கியது!

ஆம், காலையில் கண்ட குருவிகள் தான் அவள் நினைவுக்கு வந்தன! அவள் கண்முன்னர் அந்தப் பலமான காற்றும் குருவிகள் பறந்து செல்வதும் நின்றன!

'நம்முடைய நிலையும் அதுதான்! இந்த உடலைவிட்டு உயிர் நீங்கிப் பிரியவேண்டியதுதான்! ஆனுல குருவிகள் மரத்தை விட்டு நீங்கியதைப்போல இணையாக அல்ல! பிரிந்துதான் தனியாகச் செல்லவேண்டும்' என்றெண்ணினுள். அவள் அதைத்தான், துயரத்தை ஆற்றவந்த தோழியிடத்துக் கூறிக்கொண்டிருந்தாள்.' இதோ பாருங்கள்,

எள்ளற இயற்றிய
நிழல்காண் மண்டிலத்து
உள்ளூது ஆவியில்
பைப்பய நுணுகி
மதுகை மாய்தல்
வேண்டும் பெரிதழிந்து
இதுகொல் வாழி
தோழி! என்னுயிர்
விளங்குவெம் கடுவளி எடுப்பத்
துளங்குமரப் புள்ளில்
துறக்கும் பொழுதே!

—அகநானூறு 71.

இதனைப் பாடிய புலவர் அந்தியிளங்கீரனுர். அந்தியைப் பற்றி சிறப்பித்து, 'வெந்து ஆறு பொன்னின் அந்திபூப்ப' என்ற அடியால் அடைதந்து விளக்கியதால், 'அந்தி' என்ற அடையைத் தன் பெயர்க்கு முன்பும் பெற்ருர். இளங்கீரனுர் என்பதே இவரது இயற்பெயர். இவர் அகநானூற்றில் ஒரு பாடல் மட்டுமே பாடியுள்ளார்.

[(அருஞ்சொற்பொருள்) எள்ளற-குற்றமற; மண்டிலம் - கண்ணுடி; பைப்பய - சிறுகச்சிறுக; மதுகை - துன்பம்; கடுவளி - சூறைக்காற்று; துளங்குமரம் - அசையும் மரம்.]

—மொழியன்பன்

நாடக மன்றங்களுக்கு

என்னுல் எழுதப்பட்ட **அத்தான், தேவாலயம், சந்தன மழை, தலைநகரம்,**-ஆகிய நாடகங்களை நடிக்க அனுமதி கோரும் கழகத் தோழர்களுக்கும், மலாயா, பர்மா, பம்பாய்—போன்ற இடங்களில் வாழும் தமிழர்களுக்கும் ஒரு வேண்டுகோள். மேற்கண்ட நாடகங்களை நடிக்க எண்ணுவோர், **'தி. மு. க. செயலாளர், திருக்கோட்டியூர், இராமனுதபுர மாவட்டம்'** என்ற முகவரிக்கு **ரூ. 10** அனுப்பிவிட்டு அதற்கான ரசீதை என் முகவரிக்கு அனுப்பி அனுமதிபெறக் கேட்டுக்கொள்கிறேன். இதுவரை அனுமதி பெருமல் முயற்சியில் ஈடுபட்டிருப்போருக்கு இந்த வேண்டுகோளைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

—எஸ். எஸ். தென்னரசு.



18-1-58 சனியன்று மணவழகர் மன்றத்தின் சார்பில் அறிஞர் அண்ணு அவர்கள் தலைமையில் கோகலே மன்றத்தில் நடைபெற்ற தமிழ்த் திருநாள் விழாவில் "வள்ளுவர் கண்ட வீடு" என்ற தலைப்பில் ஆசிரியர் கண்ணதாசன் பேசியபோது எடுத்த படம்.

தமிழ்த் தந்தி

நம் நாட்டில் தமிழ் ஆட்சிமொழி ஆகிவிட்டது. இப்பொழுது, தமிழ் மொழியிலேயே தந்தி மூலம் செய்திகளைத் தெரிவிக்கவும், அறியவும், தாய்மொழி மட்டும் அறிந்த தமிழர்களுக்கும் உபயோகமுள்ள ஓர் முறையைக் காணவேண்டியது அவசியம்.

இம்முறையை ஆங்கில முறையைக் கொண்டு விளக்குவோமாயின் அது எளிதில் விளங்கும்.

இப்பொழுது செய்திகளை ஆங்கிலத்தில் தந்திமூலம் செலுத்தப் பயன்படும் முறை மோர்ஸ் எழுத்தொலி முறையாகும் (Morse Code). ஆங்கில மொழியிலுள்ள எழுத்துக்கள் இருபத்து ஆறு. மோர்ஸ் முறைப்படி ஒவ்வோர் எழுத்தும் குற்றொலி. (கட), நெட்டொலி – (கடடு) என்னும் இரு வேறுபட்ட ஒலிகளைத் தனித்தோ ஒன்றோடொன்று பலவாறு சேர்த்த ஒலிக்குறிக் குழுவினாலோ குறிக்கப்படுகிறது. அவை பின் வருவன,

a	.—	j	.———	s	...
b	—...	k	—.—	t	—
c	—.—.	l	.—..	u	..—
d	—..	m	——	v	...—
e	.	n	—.	w	.——
f	..—.	o	———	x	—..—
g	——.	p	.——.	y	—.——
h	....	b	——.—	z	——..
i	..	r	.—.		

TAMIL என்னும் வார்த்தையைத் தந்திமூலம் தெரிவிக்க வேண்டுமாயின் — .——..—.. என்னும் ஒலிக்குறிகள் செய்தியனுப்பும் தந்தி அலுவலகத்தினரால் (Sending Telegraph Office) கம்பிமூலம் மின்சார சக்தியின் உதவியால் செலுத்தப்படுகின்றன. செய்தி போய்ச்சேரவேண்டிய விடத்திலுள்ளோர் (Receiving Telegraph Office) அங்குள்ள கருவியின் உதவியால் முன்னர் குறிக்கப்பட்டுள்ள ஒலிக்குறிகளைக் கேட்டு அவற்றிற்குரிய ஒலி வடிவங்களாகிய TAMIL என்னும் எழுத்துக்களை வரி வடிவில் எழுதுகிருர்கள். இவ்வாறு ஆங்கிலத்தில் செய்திகள் தந்திமூலம் அனுப்பப்படுகின்றன.

தமிழிலோ உயிர்-12, மெய்-18. ஆய்தம்-1 உயிர் மெய்யெழுத்துக்கள் 216, ஆக–247 எழுத்துக்கள் உள்ளன. இவையன்றி வடமொழி மெய்யெழுத்துக்கள் 5, அவற்றின் சார்பெழுத்துக்கள் 60 ஆக 65 எழுத்துக்களும் தமிழ்மொழியில் வழங்குகின்றன. 26 எழுத்துக்களையுடைய ஆங்கிலத்தில் தந்தி முறைப் பயிற்சி பெறுவதற்கே ஒருவர்க்கு இப்போது ஆறு திங்கள் முதல் பன்னிரண்டு திங்கள்வரை ஆகின்றன. அவ்வாறிருந்தும் தவறுகள் பல நேர்வதைக் காண்கின்றோம்.

பயிற்சி பெறுவோர் ஒலியைக் கேட்டவுடன் ஒரு சிறிதும் தாமதிக்காமல் எழுத்தையறியவும், எழுத்தைக் கண்டவுடன் ஒலிக்குறிக் குழுவைத் தானுகவே மனக்கண்முன் முயற்சியின்றி நிறுத்தவும் ஆற்றல் பெறுகின்றனர்.

இத்தகைய ஆற்றலை 247 தமிழ் எழுத்துக்களையும் 65 வடமொழி எழுத்துக்களையும் கொண்ட தமிழ்மொழியில் பெறுவதற்கு எத்தனை யாண்டுகளாகும்; ஒலிக்குறிக்குழு எவ்வளவு சிக்கல் உள்ளதாயிருக்கும் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்த்தால் தமிழில் தந்திமுறை வேண்டாம்; தந்திக்கு மாத்திரம் ஆங்கிலத்தையே கையாளுவோம் என்ற முடிவுக்கு வருவோம்.

இத்தகைய முடிவு இப்பழந் தமிழுக்குத் தமிழரே தேடித் தரும் பழிச் சொல்லாகும். மற்ற நாட்டினர் தந்திக் கலையைச் "சொல்லும் திறமை தமிழ் மொழிக்கு இல்லை" என்று இகழ்ந்துரைக்கவும் இடந்தருவதாகும். ஆகையால் இதோ இருக்கிறது தமிழ் மொழிக்கும் ஒரு தனி முறை தந்திக்கு; எழுத்து ஓர் ஒலியின் உருவமாகும். அவ்வொலியை அடிப்படையாகக் கொண்டது இம்முறை. தமிழ்மொழியின் தொன்மைக்கும், மாண்புக்கும் ஏற்ப, இலக்கண விதியை யொட்டி ஆங்கில முறையிலுள்ள முதலெழுத்துக்களைக் கையாளுவது போலவே தமிழிலும் ஆக்கப்பட்டுள்ளன. (உயிர் 12, மெய் 18) 30 "உயிருமுடம்புமா முப்பது முதலே" (நன்னூல்) ஆங்கிலத்தில் உள்ள முதலெழுத்துக்களைக் காட்டிலும் தமிழில் முதலெழுத்துக்களின் எண்ணிக்கை நான்குதான் அதிகம். அவற்றிற்கும் வடமொழி மெய் எழுத்துக்களுக்கும் பின்வருமாறு ஒலிக் குறியீடுகளமைப்போம்.

அ	.—	க்		ஜ்	--.--
ஆ	.—.—	ங்	.---	ஸ்	----
இ	—.—	ச்	...	ஷ்	..-..
ஈ	——.—	ஞ்	---.	ஹ்	..--.
உ	-..	ட்	.--		
ஊ	-..-	ண்	..-		
எ	..-.	த்	-		
ஏ	..--	ந்	--.		
ஐ	.--.	ப்	..		
ஒ	.-..	ம்	--		
ஓ	-.--	ய்	-.-.		
ஔ	.--.-	ர்	.-.		
		ல்	---		
		வ்	...-		
		ழ்	--..		
		ள்	-...		
		ற்	....		
		ன்	-.		

'தமிழ்' என்னும் வார்த்தையை முதலெழுத்துக்களாலேயே எழுதவேண்டுமானுல் இலக்கணநூல்கூறுவதுபோலத்- த்–|– அ, ம் — இ; ழ் என்று எழுத வேண்டி வரும். அவ்வாறே "ஹிந்தி மொழி" என்னும் பதங்களை ஹ்–இ, ந், த்–இ, ம்-ஒ, ழ்-இ, என்றெழுதுகிறோம். தமிழ் என்னும் பதத்திற்கு மேற் குறிக்கப்பட்டுள்ள முறைப்படி ஒலிக் குறியீடுகள் த் அம் இ ழ்—.— —.— ——.. ஆகும்.

'தமிழ்' என்னும் பதத்தைத் தந்திமூலமோ,கம்பியில்லாததந்திமூலமோ (Wireless Telegraphy) செலுத்த வேண்டுமானுல், செலுத்தும் தந்தி அலுவலகத்தினர் 'த் அ ம் இ ழ்' என்னும் முதலெழுத்துக்களுக்குரிய ஒலிக்குறிகளின் —.——.——— உதவியினுல் செலுத்துவர்.

செய்தியைப் பெறும் தந்தி நிலையத்தினர் கம்பி மூலம் செலுத்தப்பட்ட ஒலிகளை அங்குள்ள கருவியின் உதவியால் அவற்றிற்குரிய முதலெழுத்துக்களைக் கேட்டு, முதலெழுத்துக்களின் உதவியால்அவற்றிற்குரிய சார்பெழுத்துக்களையும் எளிதில் தெரிந்து கொள்ளலாம். சார்பெழுத்தைக் குறிக்கும் மெய்யெழுத்தை முதலிலும் அதன் மேல் ஏறி நிற்கும் உயிரினைப் பின்னரும் குறித்தல் வழக்கமாகையால் சார்பெழுத்துக்குமுன் வரும் தனி மெய்யினைக் கண்டு கொள்வதில் ஐயம் எழாது. தந்திப் பயிற்சி பெற்றோர் ஒலிக் குறிகளால் குறிக்கப்படும் எழுத்துக்களை வரி வடிவில் வரைவதற்கு முன்பு மனத்திலேயே வார்த்தை யுருவாக்கிக் கொள்ளும் ஆற்றலுடையவர்களாகப் பழகிவிடுகின்றனர். ஆதலால் தமிழில் தந்திப் பயிற்சி பெறுவோர்க்கு செய்திகளைச் செலுத்துங்கால் சார்பெழுத்துக்களை முதலெழுத்துக்களாகப் பிரித்தலும், செய்திகளைக் கேட்குங்கால் முதலெழுத்துக்களில் சிலவற்றைச் சார்பெழுத்துக்களாகப் புணர்த்தலும், தம்மில் தாமே முயற்சியின்றி நிகழும் மனப் பழக்கமாகிவிடும்.

ஆங்கில முறையில் ஓர் எழுத்தையும் அதைத் தொடர்ந்து வரும் மற்றொரு எழுத்தையும் குறிக்கும் ஒலிக் குறியீடுகளை வேறுபடுத்த ஒரு நொடிப் பொழுது இடை வேளை விடுதல் முறையாகும். இம்முறையில் சார்பெழுத்தாய் நிற்கும் மெய்யெழுத்தையும் உயிரெழுத்தையும் குறிக்கும் ஒலிக் குறியீடுகளைப் பிரிக்க ஒரு நொடிப்பொழுதும் மற்றெல்லா எழுத்துக்களுக்கும் இடையில் இரு நொடிப்பொழுதும் இடைவேளையாக விடுவோமாயின் ஒவ்வொரு எழுத்தையும் எளிதில் புரிந்து எழுதிக் கொள்ள முடிகிறது என்பது செயல் முறையில் தெளிவாகும்.

ஒலிக் குறிக்குழு எவ்வளவுக்கெவ்வளவு ஒவ்வொரு எழுத்துக்கும் பெரியதாக அல்லது சிக்கலுள்ளதாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதனைத் தந்திமூலம் செலுத்துவதும் சேர வேண்டிய இடத்தில் அதைக் கேட்டறிவதும் கடினம். ஆகையால் கூடியவரையில் அதனைச் சுருக்கமாகவும், எளிதாகவும் அமைக்க வேண்டியது முக்கியம். பெரும்பான்மையான வார்த்தைகளிலுள்ள முதலெழுத்துக்களை கணக்கிட்டுப் பார்த்தால் மெய்யெழுத்துக்களே உயிரெழுத்துக்களைவிட அதிகம் என்பது புலனுகும். ஆகையால் உயிரெழுத்துக்களைவிட மெய்யெழுத்துக்களுக்கு மிகச் சுலபமான ஒலிக் குறியீடுகள் அமைப்பது சிறந்தது.

உயிரெழுத்துக்களில் 'ஔ' மெய்யெழுத்துக்களில் 'ங், ஞ்' ஆய்தவெழுத்து '∴' தமிழில் வழங்கும் வடமொழி எழுத்துக்கள் 'ஜ், ஸ், ஷ், க்ஷ, ஹ்' முதலியன அடிக்கடி உபயோகப்படாத எழுத்துக்கள். ஆகையால்அவைகட்கு மிகப் பெரிய ஒலிக் குறிக் குழுவினை அமைக்கலாம். ஆய்தவெழுத்து எப்பொழுதோ ஒரு முறை உபயோகப்படுகிறது.

— 10ம் பக்கம் —

வெண்பாப் போட்டி-10.

ஈற்றடி :

மேயப் புகுந்த விதம்.

முடிவு தேதி 8-2-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

தென்றல்

198374

- 10 -

முதல் நாள் தேர்தலில் மோட்டு வளையைப் பார்த்துக்கொண்டும், முகவாய்க்கட்டையைத் தடவி விட்டுக்கொண்டும், 'என்ன எழுதுவது? இதற்கு என்ன விடையாக இருக்கும்' என்று குழம்பியவாறே இருந்த ஞானசம்பந்தன் மற்ற தேர்வுகளின் போதும் ஏதோ எழுதியதாகப் பெயர் பண்ணினான். தேர்வு அறையில் வினாத்தாளை கையில் வாங்கியபோதெல்லாம் இது மிகச் சுலபமான பாடமாயிற்றே. படிக்காமல் போனேமே என்ற இரக்க உணர்ச்சி அவன் உள்ளத்தில் எழுந்து எழுந்து அடங்கியது. ஆனாலும் இனி என்ன செய்வது என்று மனம் தேறினான். மாத்தூர் பஸ் நிலையத்தில் அவன் தந்தையின் கண்களில் தோன்றிய நீர் ஞானசம்பந்தனை வேலாகிக் குத்துவது போன்ற உணர்ச்சியைப் பல நேரங்களில் பெற்றான். அப்போதே படித்திருந்தால் இப்போது இப்படித் திண்டாடித் தவிக்க வேண்டாமே என்ற இரக்க உணர்ச்சியும் எழுந்தது. எழுந்து என்ன பயன்? நல்லதோ கெட்டதோ எதுவானாலும் வேண்டிய காலத்தில் தோன்றினால்தான் அதனால் பயன் விளையுமேயன்றி, வேறு காலத்தில் எவ்வளவு மிகுதியாகத் தோன்றினாலும் அதனால் இம்மி அளவும் பயன் விளைவதில்லை. இந்த உண்மை எல்லோருக்கும் தெரிந்ததுதான் என்றாலும் யாரும் இதைக் கடைப்பிடிப்பதுமில்லை. கைக்கொண்டு ஒழுகுவதுமில்லை. எவ்வளவு பண்பட்ட மனமானாலும், பழக்கப்பட்ட மனமானாலும் செய்ய வேண்டிய காலத்தில், செய்ய வேண்டிய முறையில் எதையும் செய்வதில்லை. பாதி கெடுதல்களுக்கு இது காரணம் என்பதனை உணர்ந்துகொண்டால் போதும், திருந்த இடம் இருக்கிறது.

எந்த உணர்ச்சியும் அது வெளிப்பட வேண்டிய காலத்தில் வெளிப்பட்டால் சிறப்பு பெறுகின்றது. ஆனால் வேறு நேரத்தில் வெளிப்பட்டால் அதற்குப் பெயரும் மாறிவிடுகின்றது. எடுத்துக்காட்டாக ஒரு பெரிய வரிடத்தில் யாரேனும் ஒருவன் மன்னிப்பு கேட்பதாக வைத்துக் கொள்வோம். அந்த மன்னிப்பு என்பது என்ன? வேறு ஒன்றுமில்லை; காலங்கடந்து வெளிப்படும் நல்ல மனஉணர்ச்சிதான். தவறு இழைப்பதற்கு முன்னமே அந்த உணர்ச்சி வெளிப்படாமல், தவறு இழைத்து, பிறகு அதன் விளைவுகளைக் கண்டு அஞ்சியோ, ஆயாசப்பட்டோ 'என் செய்தோம்' என்ற கழிவிரக்கம் தோன்றியபின் ஓடிச்சென்று 'என்னை மன்னியுங்கள்' என்று கேட்டுக் கொள்ளுகின்றான். முன்னமேயே தோன்றியிருக்க வேண்டிய இந்த உணர்ச்சி தவறு இழைக்கப்பட்டபின் - காலங் கடந்தபின் – தோன்றுவதினால், நல்ல குணம் என்ற பெயரைப் பெறாமல் மன்னிப்பு என்ற பெயரைப் பெறுகின்றது.

இதைப் போலத்தான் ஒவ்வொரு துறையிலும் நன்றாகப் படிக்கவேண்டும். நல்லபடி நடந்துகொள்ள வேண்டும். பெற்றவர் மனம் குளிரவேண்டும் என்று முன்னமேயே ஞானசம்பந்தன் எண்ணியிருந்தால் அவன் வாழ்க்கையின் போக்கு வேறு வகையில் சென்றிருக்கும். ஆனால் அவனோ எண்ணிச் செயல்பட வேண்டிய காலத்தில் எங்கோ என்னவோ செய்துகொண்டிருந்துவிட்டு தேர்வுக் காலம் வந்ததும் திடுக்கிட்டு நின்றான்.

உழுகிற காலத்தில் ஊரைச் சுற்றினான். அதனால் அறுக்கின்ற காலத்தில் அவனுக்கு அல்லல் ஏற்பட்டது.

பச்சைப்புல்லைப் பார்த்தான், அதிலேயும் பாடங்கள் எழுதி வைத்திருக்கவில்லை. மோட்டு வளையைப் பார்த்தான் அங்கேயும் பாடவரிகள் காணோம்; முகவாய்க்கட்டையைத் தடவினான், அதனாலும் மூளையில் தெளிவு பிறக்கவில்லை. ஆனாலும் எப்படியோ ஒருவாரம் தேர்வு எழுதியதாக நினைத்துக்கொண்டு மாணவர் விடுதி அறையில் மன உளைச்சலோடு சோர்ந்துகிடந்தான்.

மூன்று திங்களில் தன் வாழ்க்கையில் ஏற்பட்டுவிட்ட மாற்றங்களை எண்ணினான். அவனாலேயே நம்பமுடியவில்லை. வாழ்நாள் எல்லாம் மாத்தூர் மண்ணில் பழகிய பழக்கம், செய்த நட்பு, இருந்த உறவு எல்லாம் மறந்து இங்கே புதிய ஞானசம்பந்தனாகிவிட்டதை நினைந்து வியந்துகொண்டிருந்தான்.

நாளை காலையில் ஊருக்குப் போகவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டிருந்தான். இந்த விடுமுறையில் நன்றாகப் படித்துவிட்ட குறையைத் தீர்த்துவிட வேண்டும் என உறுதிகொண்டிருந்தான். அந்த முயற்சியில் உடனே செயல்படுவதுபோல் தூசிபடிந்த புத்தகங்களைத் தட்டி ஒழுங்காக அடுக்கினான், குறிப்புக்கள் எழுதுவதற்கு என்று வெள்ளைத் தாள்களை எடுத்து மடித்து ஒரே அளவாகக் கிழித்து வைத்தான். இனி என்ன செய்யலாம் என்று எண்ணியவனாய்ச் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன ஞானசம்பந்தன், ஊருக்குப் பயணமோ ஹா ஹா..." என்று மூன்று நான்கு அறையினருக்கு அழைப்பு விடுப்பதைப்போல கூவிக்கொண்டு வந்தான் ஏகாம்பரம்.

அந்த நேரத்தில் ஞானசம்பந்தன் அவன் வருகையை எதிர்பார்க்கவுமில்லை, விரும்பவுமில்லை. ஆனாலும் வந்துவிட்டான். வந்தவனை 'வா' என்று வரவேற்காவிட்டாலும் 'போ' என்று சொல்ல இயலாமல் தவித்தான்.

சில நேரங்களில் நாம் என்ன செய்வது என்று தெரியாமல் திண்டாடும் நிலைகள் எப்படியோ வாய்த்துவிடுகின்றன. நம்முடைய உள்ளத்தில் கொஞ்ச நஞ்சம் ஒட்டிக்கொண்டிருக்கும் நல்ல உணர்ச்சிகளைப் பயன்படுத்திக்கொண்டு ஏகாம்பரத்தைப் போன்றவர்கள் இடம்பிடித்துக்கொள்ளுகின்றார்கள். அதனால்தான் அவர்களுக்கு எப்போதும் துணைக்கு யாராவது கிடைத்துக்கொண்டேயிருக்கிறார்கள்.

ஏகாம்பரம்தான் ஞானசம்பந்தனின் வாழ்க்கையில் நுழைந்து வழுக்கு வழிகளைக் காட்டிடக் காரணமாக இருந்தவன். ஞானசம்பந்தனுக்கு நல்ல எண்ணம் தோன்றியபோது ஏகாம்பரத்தை மறந்தே போனான். தன் வாழ்க்கையில் அவன் குறுக்கிட்டு வர வாய்ப்பு இருக்கிறது என்பதையே எண்ணிப் பார்க்காமல், புத்தகத்தைத் தூசி தட்டி அடுக்கிவிட்டால் போதும் படித்ததுபோலத்தான் என்று எண்ணிக்கொண்டான்.

அந்தப் பேதையை என்னென்பது? நாலு சாலைகள் சேரும் சந்தியில் ஏதாவது ஒரு சாலையில் செல்லும் போதே விழிப்பாக இருந்து நாம் எங்கே போக வேண்டும், ஏன் போக வேண்டும், போய் என்ன செய்ய வேண்டும் என்பதையெல்லாம் முடிவு செய்துகொண்டாகவேண்டும். போகின்ற வழி பொறுப்பானதுதானா என்பதையும் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படி இல்லாமல், தவறான வழியில் நுழைந்துவிட்டு எவ்வளவுதான் உறுதியாகப் போனாலும் சரி, என்னதான் வேகமாகப் போனாலும் சரி போக வேண்டிய இடத்திற்குப் போக இயலாது; செய்ய வேண்டிய செயலும் முடிவு பெறாது.

பயணத்தில் சாலையைப்போலத்தான் வாழ்க்கையில் நண்பர்கள். 'நீ உன் நண்பர்களைக் கூறு; நீ யார் என்பதனை நான்சொல்லி விடுகின்றேன்' என்று பொருள்படும் ஆங்கிலப் பழமொழி ஒன்றிருக்கிறது. நண்பர்கள், சும்மா இரண்டு சொற்கள் பேசிவிட்டு 'வணக்கம் போய் வருகின்றேன்' என்று சொல்லிச் செல்லுகின்றார்களே அவர்கள் மட்டும் அல்ல. நம்முடைய வாழ்க்கையை அமைக்கின்ற வாய்ப்பு—அழிக்கின்ற வகை எல்லாம் அவர்களிடத்திலே இருக்கிறது. சேர் இடம் அறிந்து சேர்ந்தால்தான் சிறப்பு. திருவள்ளுவர் அதனால்தான் நட்பின் பெருமையை எத்தனையோ குறள்களில் திரும்பத் திரும்பச் சொன்னார்; சலிக்காமல் சொன்னார்.

ஞானசம்பந்தனுக்கு எழிலன் உறவு இருந்தது—அங்கே மாத்தூர் மண்ணில். ஆனால் இங்கோ

— 9ம் பக்கம் —

m211.N547
N574.29

தென்றல்

இதுதான் திராவிடநாடு

- 16 -

கா. அப்பாதுரையார்

ஆசிரியர் மறைமலையடிகள் தனித் தமிழுக்கு அறிஞர் அண்ணா அவர்கள் விளக்கம் தந்தபோது, மறைமலையடிகள் உள்ளத்தையே அவர் படம் பிடித்துக் காட்டினார். தனித் தமிழ் என்றால் என்ன, தமிழ் இன்று தமிழும் ஆரியமும் கலந்த புதுத் தமிழாகி வருகிறது—புதுத் தமிழாய் அது வளர்கிறதா என்றால், இல்லை, தேய்கிறது. இந்தத் தேயும் தமிழை நிறை தமிழாக்க வேண்டுமானால் நாம் என்ன செய்ய வேண்டும், கூட்டிய கேட்டைக் குறைக்க வேண்டும். நம் பள்ளிப் பிள்ளைகள் கணக்குப், போடும் முறையில் கூறினால்

தமிழ்—ஆரியம்-திராவிடம்.

திராவிடம் என்றால் என்ன என்பதற்கு இது ஒரு நல்ல விளக்கம். ஆனால் இதைப் பார்க்கிற ஏதாவது குதர்க்க வாதி கூறக்கூடும், குறைக்கிறீர்களே, தேய்கிறதே என்று!

தமிழ்—ஆரியம்-புதுத் தமிழ்

என்று கூறுங்களேன், இதுவல்லவா வளர்ச்சி என்று அவர்கள் குழப்பும் அரைப் படிப்பாளர்களைக் குளறுபடி செய்ய எண்ணக்கூடும். ஆனால் அவர்களுக்கு நாம் கூறுவதெல்லாம் கணக்கு முறையிலிருந்து இயல் நூல் (விஞ்ஞானம்) ஒன்று பாருங்கள், தமிழ்க் கலப்பால் கெட்ட வகையை அது காட்டும் என்பதே.

இரும்பு—உயிர்வளி-துரு.

துரு—உயிர்வளி-இரும்பு.

பண்டைத் தமிழ் உண்மை இரும்பு தம்பி! இன்றைய தமிழ் அதனுடன் உயிர்வளி கலந்த புது இரும்பு, துரு-துருவையே இரும்பாகக் கருதுபவரில் நாம் இரும்பு என்று சொன்னால், அது அவனுக்கு விளங்காது. அவன் துருவைத்தானே எண்ணுவான். மறைமலையடிகள் போன்றவர்கள்-நாவலர், நாவலர் சோமசுந்தரானார், அண்ணல் தங்கோ, கி. ஆ. பெ. விசுவநாதம் போன்றவர்கள்கூட அதை உண்மையான தமிழ், நல்ல தமிழ், தனித் தமிழ் என்று கூறிவிட எண்ணலாம். ஆனால் புலவர் தலைவர்களிடையே மறைமலையடிகளுக்குமட்டும், திராவிட இயக்கத்தவரிடையே அனைவருக்கும் தெரிந்த அளவே உண்மையாதெனில், இன்றைய தமிழன் துருவுக்கே இரும்பு என்று கூறும் தமிழன். அவன் உண்மை இரும்பு என்றால்கூட உண்மைத் துரு என்றுதான் எண்ணுவான். பழைய இரும்பு என்றாலும் பழைய துரு என்பது தவிர வேறு அவனுக்கு விளக்கம் ஏற்படாது. ஆகவே

துரு—திராவிடம்-இரும்பு

என்பதுபோல, தமிழ்-ஆரியம் என்பதைக் குறிக்க ஒரு மயக்கம் தந்த அறிவுத் துறைச் சொல்லை (Technical Word) வழங்க எண்ணினர்.

தமிழ்-திராவிடம் இவற்றிடையே உள்ள வேற்றுமையை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுவது 'எல்லை' தான்

தமிழ், தமிழகம்—சிலம்பு பாடிய இளங்கோவின் நாட்டை அயல் நாடாக்குகிறது. சிலப்பதிகாரத்தை அயல் மொழி நூலாக்குகிறது.

தமிழ், தமிழகம்-எந்தத் தமிழரசரும் கொடுக்காத அளவு, சோழ பாண்டிய நாடுகளையே விலைக்கு வாங்கிவிடப் போதிய அளவு-நூறுயிரக்கணக்கான பொன்னை-ஆனை மலைக்காடு முழுவதையும்-தம் நாடு முழுவதையுமே-பதிற்றுப் பத்துப் பாடிய பத்துப் புலவர்க்கும் வழங்கிய வண்டமிழ்ச் சேரரை— பதிற்றுப் பத்துக்கொண்ட நெடுஞ்சொற்றுதியன் சேரலாதனை, இமய வரம்பனை, மேல் கன்னட நாடு பெற்ற யானைக் கட்சேயை, கடலாண்ட சேரன் செங்குட்டுவனை, கன்னட ஆந்திர நாடுகளை முழுவதும் வென்றாண்ட ஆடு கோட்பாட்ச் சேரலாதனை அயல் நாட்டவராக்கும் சொற்கள் ஆகும்.

தமிழ், தமிழகம்- தொல்காப்பியர் காலப் பாண்டி நாட்டையும் அதன் தலை நகரையும், தலை இடைச் சங்கப் பாண்டியர்களையும், அப்பகுதியிலடங்கிய இன்றைய இலங்கையையும் அயல் நாடுகளாக, அயலின நாடுகளாக ஆக்கிவிடும் என்றல்ல, ஆக்கிவிடுகிறது. இலங்கைத் தமிழர் கூடத் தம்நாடு பண்டைத் தமிழகத்தின் ஒரு பெரும் பகுதி என்பதை மறந்துவிட்டனர்.

ஆரிய ஆட்சியிலுள்ள தேயும் தமிழ் வாழும் தென்னகத் தமிழகத்துக்கே தமிழுணர்ச்சி யூட்டிய தமிழர் யாழ்ப்பாணத் தமிழர்களே! அது இயல்பும் கூட! ஆனால் அத்தகையவர்களையே—விபுலானந்த அடிகள், ஆறுமுக நாவலர் முதலிய ஆராய்ச்சிச் சான்றோர்களையே தமிழ் வரலாறு மறந்துவிடச் செய்த சொற்கள் தமிழ், தமிழகம் என்ற சொற்களே-தேய்ந்த 'ஆயரித் தமிழ் பேசும் தமிழர் வழங்குவதனால் மெய்ப்பொருள் கெட்டுப் போன இச்சொற்களே யாகும். ஏனெனில் அவர்கள் யாவரும் தாம் வாழும் இலங்கையைத் தமிழருக்கு அயலான நாடு என்றே கருதி, அக்கருத்தை இலங்கையிலும் தமிழுலகிலும் வெளியேயும் பரப்பி விட்டனர்! இலங்கை - பாண்டியர் ஆண்ட இலங்கை, தொல்காப்பியர் வாழ்ந்த இலங்கை என்பதை மறந்து அது விபீஷணன் ஆண்ட இலங்கை என்று நினைத்துக்கொண்டனர்.

இலங்கைத் தமிழகம் தமிழகத்தின் ஒரு பகுதி, அது தமிழர் குடியேறிய நாடல்ல. இராமாயண காலத்தில் இலங்கைக்கும் தென்னாட்டுக்கும் இடையே கடல் புகுந்துகொண்டது. ஆனால் இராமாயண காலத்துக்கு முன், தொல்காப்பியர் காலத்தில், இடைச்சங்க தலைச் சங்க நாட்களில், பாண்டி நாடும் தமிழகமும் இலங்கையைமட்டுமல்ல, அது தாண்டி நெடுந்தொலை பரவி யிருந்தது. அது பரவியிருந்த பகுதிகள் கடலில் பிரிக்கப்பட்டும், கடலடியில் நழுவிப் புடைபெயர்ந்துமே இன்றைய மடகாஸ்கர், மலாயா, தென் கிழக்காசியத் தீவுகள், ஆஸ்டிரேலியா, மேலை அமெரிக்காவாக மாறியுள்ளன என்று குல நூல், உயிர் நூல், செடி நூல் இன நூல் அறிஞர் கூறுகின்றனர்.

தமிழகத்திலிருந்து இலங்கைக்குக் குடியேறிய தமிழன் உண்டு. ஆனால் அது திருநெல்வேலியிலிருந்தும் தஞ்சையிலிருந்தும் சென்னைக்குக் குடியேறுபவர்கள் போன்ற நிலையேயன்றி வேறன்று. வரலாற்றுக் காலங்களில் குமரிக்கு வடக்கிலுள்ள தமிழகத்திலிருந்து இலங்கைக்கு பலர் சென்றதுண்டு. அதுபோலவே இலங்கையிலிருந்து குமரிக்கு வடக்கிலுள்ள தமிழகத்துக்குக் குடி பெயர்த் தமிழரும் ஏராளம்-தமிழரில் ஒரு பெருங் பகுதியினரும் மலையாள நாட்டவரில் ஒரு பெரும் பகுதியினரும் ஆள ஈழவர் என்ற சமுதாயப் பெயர் அதற்கு இன்றளவும் சான்றளிக்கிறது.

இலங்கையின் மிகப் பழமையான பெயர் தாம்பிரபர்ணி என்பதே.

தமிழ், தமிழகம்—தெலுங்கர் கன்னடியரையும், வங்காளி குசராத்தியரையும், சீன சப்பானியரையும், டேனியர் பின்னியரையும் ஒருங்கே அயலாராக்கும் சொற்கள். இது அப்பா அம்மை தவிர மற்ற எல்லாரையும்—மாமன் மைத்துன-சிற்றப்பன், சின்னம்மை தங்கை தமக்கை கணவன் ஆகிய எல்லாரையுமே—அயலாரென்று கருதும் 'இனமடமை'யை இன்றைய தமிழனிடம்-தமிழனிடம் மட்டுமே உண்டுபண்ணியிருக்கிறது. ஏனெனில் வடவர் தம் இன எதிரியான புத்தரை ஆரியராக்கி, தென்னாட்டுக்கும் தெற்கிலிருக்கும் சிங்களவர்களையும் அவர்கள் மொழியையும் துணிந்து ஆரியம் என்று நிலைநாட்ட முற்பட்டு, பண்டைப் பாண்டியரும் சோழரும் ஆண்ட மலாயா, சுமாத்ரா, சயாம், இந்து சீனப் பகுதிகளில் தமிழர் நாகரிகச் சின்னங்களையே மறைத்துத் திரித்து உலகுக்கு ஆரியச் சின்னங்களாகக் காட்டி வருகின்றனர்.

ஓமாந்தூரார் ஆட்சியின்போது நம் அமைச்சர்கள் உள்ளங்களிலும் கண்களிலும் திராவிட ஒளி காட்டி அவர்களையும் அவர்கள் பரிவாரங்களையும் முக்காடிட்டு அவ்வொளியை மறைக்கச் செய்த நிகழ்ச்சிகள் பல உண்டு. 'நம் நாடு,' 'திராவிட நாடு,' பழைய 'மாலைமணி' வாசகர்கள் அவற்றை முற்றிலும் மறந்திருக்கமாட்டார்கள். ஆனால் ஒரே ஒரு நிகழ்ச்சியைமட்டும் இங்கே குறிப்பிடுகிறோம்.

இலங்கைத் தமிழ் விழாவில் நம் பெயரில்லாத் தமிழ்நாட்டின் தமிழமைச்சரும் தேய்ந்த தமிழகத் தமிழறிஞரும் சென்றிருந்தனர். கண்காட்சிகளைப் பார்வையிடச் சென்றனர். புத்தகக் கண்காட்சி படக் கண்காட்சி ஆகியவை கடந்து கலைக் கண்காட்சிப் பக்கம் திரும்பினர்.

'திராவிடக் கலையரங்கம்'

என்ற பெயரைக் கண்டு திகைத்தனர். இது எந்தக் கறுப்புச் சட்டைக்காரன் செய்த செயல் என்று தமிழுக்கே வளர்ச்சிக் கழகம் அமைத்துள்ள அந்நாளைய அமைச்சர் சீறினாராம்! தமிழ் விழாவில் ஏன் 'திராவிடம்' என்று கடிந்து உசாவினாராம்! பதில் அவரை வென்குற வைத்தது. தமிழ்க் கலைகளில் மிகப் பெரும்பாலானவை 'தமிழகத்துக்கு வெளியிலே தானே இருக்கின்றன?' என்று கேட்டார்களாம் அவர்கள்!

தொடரும்

சேலம் மாவட்ட

தி. மு. க. 3வது மாநாடு

1958 பிப்ரவரி 15, 16 சனி, ஞாயிறு நாட்களில் வேலூர் (சேலம்) 'அழகிரி பந்தலி'ல் நடைபெறும்.

தலைவர் :

கலைஞர் மு. கருணாநிதி, எம். எல். ஏ.

திறப்பாளர் :

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி

அறிஞர் அண்ணா, நாவலர் இரா. நெடுஞ்செழியன், கழக முன்னணிச் சொற்பொழிவாளர்கள் கலந்துகொள்வர்.

இரு நாட்களிலும் கலைநிகழ்ச்சிகள் உண்டு.

இரு நாட்களுக்கும் நுழைவுக் கட்டணம் :

ரூ. 5, 3, 2, பெண்களுக்கு ரூ. 1

பி. எம். குப்புசாமி, பொருளாளர். ப. இராமலிங்கம், செயலாளர். ஜி. பி. சோமசுந்தரம், வ. கு. தலைவர்.

இரா. தாண்டவன்—தொண்டர்படைத் தலைவர்.

தென்றல்

1-2-58

— 7ம் பக்கத் தொடர்ச்சி —

ஏகாம்பரத்தின் துணை கிடைத்தது, இல்லை வந்து சேர்ந்தது. ஏகாம்பரம் ஞானசம்பந்தனை எங்கெல்லாமோ இட்டுச்சென்றான், இழுத்துச்சென்றான்.

ஞானசப்பந்தனுக்கு நல்ல உணர்வு வந்தபோது அவனை அறவே மறந்துவிட்டான்; ஆனால் ஏகாம்பரம் அவனை மறக்கவில்லை. இடையிலே சில நாட்கள் மறைந்திருந்தான். கைப்பணமெல்லாம் கரைந்து சம்பளப் பணத்திற்கு என்ன செய்வது என்று திண்டாடியபோது தொலைவில்நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான். எப்படியோ அவன் தேர்வு அறைக்குள் நுழைந்துவிட்டபின் தேர்வுகள் முடியட்டும் நம்முடைய வலையை விரிப்போம் எனக் காத்துக்கிடந்தான்.

அற்ற குளத்தில் இருந்து பறவைகள் பறந்தோடிப் போவதைப்போல ஞானசம்பந்தன் அல்லல் பட்டபோது அருகில் வரவில்லை. அற்றகுளம் உற்ற குளமானதும் ஆம்பல் பூத்ததும் பறவை பறந்தோடி வருவதைப் போல "என்ன ஞானசம்பந்தன்" என்று கேட்டுக்கொண்டு வந்துவிட்டான்.

அவனைக் கண்டதும் ஞானசம்பந்தன் கடன்காரனைக் கண்டதும் கவலை மிஞ்சும் நெஞ்சத்தினனைவதுபோல் கலங்கிப்போனான். 'ஊருக்கா' என்று கேட்கிறானே என்ன சொல்வது இவனிடம் என்று எண்ணித் தயங்கினான்.

ஏதாவது சொல்லியாகவேண்டுமே என "ஆமாம்... ஊம்..." என்று இழுத்தான்.

"என்ன ஆமாம்...போகிறேன் என்று தெளிவாகச் சொல்லேன். எனக்கென்ன" என்றான்.

"என்னப்பா அப்படி ஒரேயடியாக என்னவோ சொல்லாததைச் சொல்லிவிட்டதைப்போல விரைக்கின்றாயே."

"நான் ஏனப்பா விரைக்கின்றேன். நீதான் - மாத்தூரோ மோட்டூரோ - அந்தக் காட்டூருக்குப் போவதற்கு இறக்கை கட்டிக்கொண்டு பறக்கிறாய்" என்று சலித்துக்கொண்டான் ஏகாம்பரம்.

"சரி பறக்கவில்லை, நடக்கிறேன். நீ செய்தியைச் சொல்லவில்லையே இன்னும்.

"சொல்லுவதென்ன. உடனே புறப்பட வேண்டியதுதான் வருகிறாயா—சொல்."

"எங்கே?"

"வேறு எங்கே 'ஒய்யார விலாஸ்'தான். ஹி... ஹி..." என்று கண்ணைச் சிமிட்டினான் ஏகாம்பரம்.

அந்தப் பெயரைக் கேட்டவுடன் ஞானசம்பந்தன் தீயை மிதித்தவன்போலானான். அவன் முக வேறுபாட்டைக் கண்ட ஏகாம்பரம் பணம் இல்லாமல் தான் திண்டாடுகின்றானோ என எண்ணியவனாய்.

"அடே பிச்சுக் கஞ்சனே, உன் பணம் யாருக்கு வேண்டும். இதோ பார் உனக்கும் தான்" என்று தன் கால் சட்டைப் பையை குலுக்கிக் காட்டினான்.

"ஒய்யார விலாசுக்கா..." என்று ஞானசம்பந்தன் இரண்டாம் முறையாகக் கேட்டபோது அவன் மனம் மாறினான் என்பது குரலில் இருந்த கனிவிலே புலப்பட்டது.

'ஒய்யார விலாஸ்' ஞானசம்பந்தனுக்குப் புதிது அல்ல அந்த நிலையில் இரண்டொரு முறை சென்று வந்து அவனே அங்கே 'வாடிக்கைக்காரன்' ஆகும் நிலைக்கு வந்துவிட்டான்.

எனக்கு வந்த புதிதில் ஏகாம்பரத்தின் நட்பு ஏற்படுவதற்கு முன் ஞானசம்பந்தன் கண்டன சில. ஆனால் ஏகாம்பரம் அவனுக்குக் கற்றுக் கொடுத்தது கடல் அளவு இருக்கும்.

கொஞ்சங் கொஞ்சமாக நஞ்சு ஊட்டிடும் பாம்பைபோல ஞானசம்பந்தனை ஏகாம்பரம் கொஞ்சங் கொஞ்சமாகத் தன் பிரதிநிதியாக்கினான்.

'இந்த சிகரட் நல்லது' என்று கற்றுக் கொடுத்தவன் மெல்ல ஒவ்வொரு பழக்கமாக, கற்றுக் கொடுத்து முடிவில் 'ஒய்யார விலாஸ், வாடிக்கைக்காரரில் ஒருவனாகவும் செய்துவிட்டான்.

ஒய்யாரவிலாஸைப்பற்றிஏகாம்பரம் சொன்னபோது ஞானசம்பந்தன் முதலில் நம்பவில்லை. ஏகாம்பரத்தின் மூளையில்உதித்த கற்பனை என்று எண்ணி நகையாடினான்.

'உண்மைதான்' என்று அந்த ஏகாம்பரம் சொன்னபோது திகைத்தான். 'நீயும் வரலாம்' என்றபோது நடுங்கினான்.

ஆனால் திகைப்பும் நடுக்கமும் ஆற்றல் அற்ற உணர்ச்சிகள். எளிதில் மாண்டுவிடக்கூடியன. துணிவு ஒன்றே உறுதியாக நிலைக்கும் ஆற்றல் படைத்தது. ஆசைப்புயல் அடிக்கும்போது அதில் அடி அசைந்து வீழ்ந்துபடும்நொய்மையுடையனதிகைப்பும் நடுக்கமும் ஆனால் துணிவும் உறுதியும் எந்தப் புயலையும் சூறுவளியையும் எதிர்த்து நின்று வாகை சூடிடக்கூடியன. அதனால்தான் ஆற்றல் மிக்க அந்த உணர்ச்சிகள் உருவாக நெடுநாட்கள் ஆகின்றனவோ என்னவோ!

'நீயும் வரலாம்' என்று ஒருநாள் ஏகாம்பரம் அழைப்பிதழ் கொடுத்தபோது ஞானசம்பந்தன் அவனுடன் புறப்பட்டுவிட்டான்.

பரபரப்பான சென்னையின் தெருக்களில் ஓடிச்சென்று கொண்டிருந்த மக்கள் வெள்ளத்தில் புகுந்து வெளியேறி ஏகாம்பரம் ஒரு பெரிய உணவு விடுதியின் மாடி அறையை நோக்கி நடந்தான்.

அந்த விடுதியின் முகப்பில் 'ஒய்யார விலாஸ்' என்று அலங்காரமான எழுத்துக்களில்பலகை எழுதித் தொங்க விடப்பட்டிருந்தது.

என்ன ஏகாம்பரம் இப்போது தானே சிற்றுண்டி சாப்பிட்டோம். மறுபடியுமா?" என்றான்.

"உஸ். ஒன்றும் கேட்காமல் என் பின்னே வா. உனக்கு ஒன்றும் தெரியாது" என்று அவனை சின்னப்பிள்ளையைத் திருவிழாக் கூட்டத்தில் இரண்டு விரல்களைக் கொக்கி மாட்டி இழுத்துக் கொண்டு போகும் பெரியவர்களைப்போல்இழுத்துக் கொண்டு போனான்.

'விடுவிடு' என மாடிப்படிகளில் ஏறியவன் அங்கே மூலையில் உட்கார்ந்திருந்த ஒரு ஆளிடம் 'அறைகளுக்குப் போக வேண்டும்' என்றான்.

'இதோ வருகிறேன்' என்று சொல்லிப்போன அந்த ஆள் மறுநொடியில் திரும்பி 'வாருங்கள்' என இருவரையும் அழைத்துப்போய் ஒரு பெரிய சோபாவில் உட்கார வைத்தான்.

ஏகாம்பரம் ஏதோ பழகிய இடத்தில் இருப்பதைப்போல இருக்க, ஞானசம்பந்தன் ஏதும் புரியாமல் 'திருதிரு' என விழித்துக்கொண்டிருந்தான்.

சற்றுநேரத்தில் ஏழெட்டு பெண்கள் அந்த அறைக்குள் வந்து ஒருகணம் நின்றுவிட்டு வெளியேறினர்.

அவர்களைக் கண்டவுடன் ஞானசம்பந்தன் திடுக்கிட்டுப் போனான்.

அவர்கள் அணிந்திருந்தஉடைகளோ செய்துகொண்டிருந்த ஒப்பனைகளோ இதுவரை அவன் கண்டறியாத வகையில் இருந்தன. அவற்றில் வண்ணம் தீட்டப்பட்டதைப்போல அவர்கள் முகத்தில் வண்ணம் தீட்டப்பெற்றிருந்தது. அந்த அறைக்குள் அவர்கள் இருந்தது ஒரு நொடிதான் எனினும் அந்த ஒரு நொடிக்குள் அவர்கள் நடந்துகொண்டவகை ஞானசம்பந்தனுக்கு 'என்னவோ'போல் இருந்தது. ஏதும் சொல்லத் தெரியாமல் விழித்தான்.

விளக்கெண்ணெய் குடித்துவிட்டு வாயெல்லாம் குமட்டல் எடுக்க குழந்தைகள் திண்டாடுவதைப்போல் ஞானசம்பந்தனின் நெஞ்சம் குமட்டல் எடுத்தது.

ஆனால் ஏகாம்பரமோ செயற்கரிய செயல் ஏதோ செய்துவிட்டதைப்போல பெருமிதத்தோடு வீற்றிருந்தான்.

ஞானசம்பந்தனுக்கு என்ன நிலைமையில் இருக்கிறோம் என்பதை விளங்கிக்கொள்ளவே நெடுநேரமாயிற்று.

நாடகம் பார்க்கக் காத்துக் கொண்டிருக்கும்போது முன்னே வெள்ளை வெளேர் என்று ஒரு திரை தொங்குகின்றது. அந்தத் திரையில் ஒன்றும் இல்லை. ஆனால் ஒன்றுமில்லாத அந்தத் திரைக்குப் பின்னே என்னென்னவோ இருக்கின்றன. அந்தத்திரைவிலகியதும் காணும் காட்சிகள் தான் எவ்வளவு! அதைப்போல ஞானசம்பந்தன் 'ஒய்யார விலாஸ்' மாடியில் நடந்த நிகழ்ச்சியை நினைந்து பார்த்தான். அதை எண்ணும்போதே அவனுக்கு வியப்பாக இருந்தது.

ஒய்யாரவிலாஸ் உணவுக்கடையில் கீழே இருந்த அந்தப் பெரிய இடத்தில் அவன் சில முறை வந்து சிற்றுண்டி அருந்தியிருக்கின்றான். ஆனால் அப்போதெல்லாம் தன் தலைக்குமேல் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கும் என எண்ணியவன் அல்ல.

நாடகத்திலாவது உட்கார்ந்திருப்போருக்குத் திரை தூக்கப்படதும் பாட்டும் கூத்தும் இருக்கும் எனத் தெரியும். ஆனால் இங்கோ என்ன இருக்கும்— இருந்தது—என்று தெரியாமல், புரியாமல் ஞானசம்பந்தன் விழித்தான்.

"என்ன சார் எது..." என்று முன்னே மூலையில் முடங்கிக் கிடந்த அந்த ஆள் வந்து ஏகாம்பரத்திடம் கேட்டான்.

"சொல்கிறேன் இரு" என்று அவனை அப்பால் அனுப்பிவிட்டு "என்ன ஞானசம்பந்தன்?" என்றான்.

ஞானசம்பந்தனோ அவனுக்கு பதில் சொல்லும் நிலையில் இல்லை. மறுபடியும் மறுபடியும் ஏகாம்பரம் கேட்டதும் "வா விடுதிக்குப் போகலாம்" என்று எழுந்துவிட்டான்.

ஏகாம்பரத்திற்கு ஏமாற்றம் வந்துவிட்டது. "ஏன் வந்தாய். இப்போது எதற்கு விடுதிக்குப் போக வேண்டும் என்கிறாய்" என்று கேட்டான்.

"எல்லாம் அங்கே சொல்லுகிறேன் வா" என்று இவனே முன்னே இறங்கினான்.

அவர்கள் இறங்கும்போது அந்த மூல ஆள் வந்து "என்ன சார்?" என்றான்.

"வருவோம்" என்று அவனுக்கு ஏகாம்பரம் விடை சொன்னான்.

தொடரும்

திருமணம்

மதுரைத் தோழர் மு. வசனப்பித்தன் அவர்களுக்கும் திருமதி சுசீலாவுக்கும் 1-2-58 சனி காலை 10 மணி அளவில் மதுரை பழனி டாக்கீசில் திருமணம் நடைபெறும். புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். மணவிழாவிற்குத் தலைமை தாங்குவார். மதுரை எஸ். முத்து, ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., டாக்டர் அருணசலம் மற்றும் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

சிலை

— துறையூர் ந. அலி —

கலைக்கோவில், திருக்கோவில் காண்ப தற்குக்
கவினூறும் எழில்கூடம்: மக்கள் போற்றும்
தலையாய உருவங்கள் வரிசை யாகச்
சமைத்திருக்கும் கடவுளரின் காட்சிக் கூடம்
இலைகொண்டு பூக்கொண்டு இறைவன் மீது
இரங்கற்பா திருவிசைப்பா பாடும் மக்கள்
மலைமலையாய்க் குவிகின்றார்; சிலையின் முன்னம்
மண்டியிட்டு வணங்குகின்றார்! வாழ்த்து கின்றார்!!

தேன்சொட்டும் நறுமலர்கள் மிகவும் உண்டு
சிலைக்காக உயிர்நீக்கும் அவைகள் அங்கு
வான்முட்டும் திருக்கோவில் தரையின் மீது
வற்றாத மாக்கவிஞன் நாவைப் போல
தேன்சொட்டும் பால்சுரக்கும் நெய்யும் ஓடும்
திருவாளர் கல்சிலைகள் அவற்றை உண்பர்
ஏனென்று கேட்பதற்கு ஆளே இல்லை
எத்தர்கள் குடிகொள்ளும் குகையே கோவில்.

உலகத்தார் கண்ணுக்குத் திரையைப் போட்டு
ஒன்றுமறி யாதவர்போல் நெய்யைப் பாலைக்
கலங்கலமாய் வீட்டிற்குக் கொண்டு செல்லுங்
கள்ளர்கள் குடியிருக்குங் குகையே கோவில்
சிலைகட்கு உயிருண்டு என்றும், கோவில்
திருவிளக்கு அணையாத விளக்கு என்றும்
உலகத்தார் எண்ணுகின்றார் அதனா லன்றோ
உலுத்தர்கள் ஏமாற்றி வாழ்கின் றார்கள்.

★

கல்தோன்றி மண்தோன்றாக் காலந் தொட்டு
குவலயத்தில் எரிந்துவந்த மணி விளக்கு
அல்தோன்ற, அணைகின்ற நிலையில் வாட
அதுகண்டு உலகத்தார் வருந்த வில்லை
சொல்லொண்ணா துன்பத்தில் சிக்கி யுள்ளம்
துயருற்று வெம்பிப்போய் வாடு கின்ற
நல்லவருக் கிவ்வுலகில் இடமே இல்லை
நந்தாவி ளக்கின்று அணைதல் காணீர்!

வேல்போலக் குத்துகின்ற முட்க ளூடே
வேல்விழியாள் துகில்சிக்கி யுள்ள தின்று
பால்வண்ண வெணணிலவின் முகத்தை மூட
பரபரப்பாய் செல்லுகின்ற முகிலைப் போல
சேல்விழியாள் வாழ்க்கையிலே ஏழ்மைத் துன்பம்
திரைபோல சூழ்ந்துளது. தடுப்பார் இல்லை.
ஆல்போல படர்ந்திருந்த இன்ப வாழ்வின்
ஆணிவேரைச் செல்லரித்து விட்ட தந்தோ!

இதழ்சுருங்கி உலர்ந்துபோன மலர்போல் இன்று
ஏந்தியழையாள் வாடுகிறாள்; வருந்து கின்றாள்
இதயத்தில் ஒளிவிட்டு எரிந்த வாழ்க்கை
எழில்விளக்கு அணைந்ததனால் இருளே எங்கும்
பதைக்கின்றாள், பிதற்றுகிறாள் பரிவு காட்ட
பார்மீது எவருமிலை. கோவில் உள்ளே
துதிபாட சென்றுவிட்டார் மக்கள் அந்தோ
தடங்கண்ணாள் நீருகுத்து புலம்பு கின்றாள்!

திருக்கோவில் முன்னிலையில் திரு விழந்த
தையலவள் புரளுகிறாள் அவளின் மேனி
உருக்குலைந்து புழுதியிலே கிடக்கக் காரி
உமிழ்கின்றார், உதைக்கின்றார் சில்லோர்; மற்றோர்
சிரிக்கின்றார் உயிரற்ற சிலையாய் எண்ணி
செல்கின்றார் கல்சிலையை வணங்க உள்ளே;
திருக்காட்சி காண்பவர்கள் கண்ணீர் சிந்தித்
தேறுதலும் கூறவில்லை. இதயம் கல்லோ?

[ஜனவரி மாத "சரிதா" இதழில் வந்த கவிதையின் உரு.]

— 6ம் பக்கத் தொடர்ச்சி —

ஆகையால் அதற்கென தனியானதோர் ஒலிக் குறியின்றி அதனை முப்புள்ளி என்றும் குறிப்பிடலாம் வடமொழி எழுத்துக்களில் 'க்ஷ' என்னும் எழுத்தை 'ட்ச்' என்னும் இரு தமிழ் எழுத்துக்களால் பெரும்பாலும் ஒலி வேற்றுமையின்றிக் குறிப்பிடலாமாகையால் சுருக்கங் கருதி அதற்கும் தனிப்பட்டதோர் ஒலிக்குறி வேண்டியதில்லை.

ஆங்கிலத்தில் செய்தி அனுப்புவதுபோல் அவ்வளவு வேகமாகத் தமிழிலும் தந்திமூலம் செய்தி அனுப்பமுடியுமா என்னும் ஓர் கேள்வி எழலாம். இரு மொழிகளிடையேயுள்ள வேற்றுமைகள் பலவாகையால் இதற்குத் திட்டமான பதில் கூறுவதற்கில்லை. இருப்பினும் ஆங்கிலச் சொற்களைத் தமிழிலும், தமிழ்ச் சொற்களை ஆங்கிலத்திலும் எழுத்துக்கு எழுத்து சமமாக எழுதி, அவற்றிலுள்ள முதலெழுத்துக்களை எண்ணிப்பார்த்தால், தமிழில் எழுதப்பட்ட சொற்களிலுள்ள முதலெழுத்துக்களின் எண்ணிக்கையைவிட குறைவாகவோ அல்லது சமமாகவோ இருக்கும். (எடுத்துக்காட்டு) LONDON (6) லண்டன்-ல் அண்ட் அன் (6) தமிழ்-த்அம்இழ் (5) THAMIZH (7)

ஆகையால் ஆங்கிலச் செய்திகளை எவ்வளவு வேகமாக அனுப்பமுடியுமோ ஏறக்குறைய அவ்வளவு வேகமாகத் தமிழ்ச் செய்திகளையும் தந்தி மூலம் செலுத்த முடியும் என்று கூறலாம்.

ELEPHANT-யானை

DO NOT COUNT-எண்ணாதே

இவற்றின் தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கை குறைவு. ஆகையால் இவைபோன்றசொற்களை ஆங்கிலத்தைக் காட்டிலும் தமிழில் தந்தி மூலம் குறுகிய கால அளவில் செலுத்தமுடியும்.

DESK-சாய்வு மேஜை

THEY ATE-அவர்கள் சாப்பிட்டார்கள்.

இவைபோன்ற சொற்களில் ஆங்கில எழுத்துக்களைக் காட்டிலும் தமிழ் முதலெழுத்துக்களின் எண்ணிக்கை அதிகம். இச்சமயங்களில் தமிழ்ச் சொற்களைச் செலுத்த ஆங்கிலச் சொற்களைக் காட்டிலும் சற்றதிக நேரமாகும். ஆகையால் சராசரி கணக்கிட்டுப் பார்த்தால் இரு மொழிகளிலும் காலக் கணக்கு ஏறக்குறைய ஒன்றாகும், என்பது தெளிவாகும்.

எண்கள், நிறுத்துக் குறியீடுகள் முதலியவற்றைக் குறிக்க ஆங்கில முறையில் கையாளப்படும் ஒலிக் குறியினங்களையே தமிழில் பயன்படுத்திக்கொள்ளலாம். ஏனெனில் அவைகள் ஆங்கிலத்துக்கும் தமிழுக்கும் பொதுவானவை. தந்தித் துறையில் கையாளப்படும் சுருக்கப் பெயர்களுக்குத் தமிழின் தனித் தகைமைக்குத் தக்கவாறு தமிழில் சுருக்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் தமிழில் தந்தி முறை செயல்படுங் காலைதான் தேவை. ஆகையால் அவைகள் இங்கு சேர்க்கப்படவில்லை.

தமிழில் உயிர் மெய்யெழுத்துக்களுக்குத் தனி வரி வடிவு உண்டு. ஆங்கிலத்திலோ உயிரையும், மெய்யையும் தனித் தனியாகப் பிரித்து எழுதுகின்றனர். தமிழில் தனித் தனிச் சார்பெழுத்துக்கள் இல்லையானால் நாமும் ஆங்கிலத்தில் எழுதுவது போல் உயிரையும், மெய்யையும் பின்வருமாறு பிரித்து எழுத வேண்டி வரும்.

தமிழ்	த்-அ	ம்-இ	ழ்
THAMIZH	THA	MI	ZH

இதனை அடிப்படையாகக் கொண்டதுதான் இம்முறை.

இம்முறை எளிதில் கையாளக் கூடியது என்பதை நிரூபிக்க 10-6-57ல் திருச்சியில் நடைபெற்ற அஞ்சல் தந்தி ஊழியர் மாநில மாநாட்டிலும், திரு. கி. அரங்கமன்னார், திரு. கி. வரதராசனார் துணைகொண்டு செயல்படுத்திக் காட்டப்பட்டது. தமிழில் தந்தி முறையை ஏற்படுத்த அரசினர் அதிகச் செலவு செய்ய வேண்டியதில்லை. சில மணி நேரப் பயிற்சியால் ஆங்கிலத் தந்தி முறை பயிற்சியுள்ளவரே இதனையும் கையாளலாம்.

-புதுவை அ. குப்புசாமி

நாகராஜன்
காப்பித்தூள்
நூற்றுக்கு நூறு நயமானது.
மின்சாரத்தில்
வறுக்கும் இயந்திரத்தில்
சிறந்த முறையில்
தயாரிக்கப்படுகிறது.
நாகராஜன்
காப்பி ஒர்க்ஸ்,
செக்காலை ரோடு,
காரைக்குடி.

— 2ம் பக்கத் தொடர்ச்சி —

கலே கெட்டித்து கோட்டையின் மேலே கொண்டு வந்து நிறுத்தினர். வெள்ளைக்காரப் பெண்களை அப்புறப்படுத்தினர்.

ஆலப்புழையை நெருங்கினுன் வேலுத்தம்பி. போர்வெறி பிடித்தவர் கும்பினிப் படையினர்-நாட்டு ஆர்வம் மிக்கவர் தளவாய் படையினர்! வெள்ளையர் வெள்ளைக்கொடி ஏற்றினர்; தளவாயை சந்தித்தனர்!

"கர்னல் பதவி உனக்களிக்கிருேம். விட்டுவிடு இந்த வீண் புத்தியை" என்று ஆசை காட்டினர்! வெள்ளையர் கொடுக்கும் பெரிய பதவியே அதுதான். மறுத்தான் வேலுத்தம்பி.

கஞ்சிவெள்ளம் கிடைத்தாலே போதும் இந்த கர்னல் பதவி வேண்டாம்! நாட்டுக்கும் மன்னனுக்கும் உழைப்பதே என் கடமை-என்றுன். போர்முரசு எழும்பியது. வெள்ளையர் பலரைப் பிடித்தான். மூர்க்கம் நிரம்பிய 24 பேர்—ஆறுயிரம் மைலுக்கப்பாலிருந்து வந்து மிளகு வியாபாரத்திலே துவங்கி கோட்டைகள் கட்டி நாட்டு ஆட்சியிலே பங்கு கொண்டவர்கள். வரி கொடுக்க வேண்டிய அவர்கள் கப்பம் வசூலிக்கத் துவங்கினர்.

24 பேரைப் பிடித்தான்-சாக்கிலே கட்டினுன். ஆலப்புழைக்கருகிலே ஓடிய பள்ளாதுருத்தியாற்றிலே தூக்கி யெறிந்தான்! மிகுதியிருந்த வெள்ளையர், கோட்டையை விட்டனர்-தன்உயிரைக் காப்பாற்றிக்கொள்ள கப்பலிலே ஏறினர். நடுக் கடலிலே வாசம் செய்தனர் உணவின்றி-உடையின்றி!

இந்த ஆலப்புழை நிகழ்ச்சியை கேள்விபட்டனர் கும்பினியார். துடித்தெழுந்தனர். பாளையங்கோட்டை கும்பினிப்படை புறப்பட்டது, திருவாங்கூரை நோக்கி.

வேலுத்தம்பித் தளவாய் தன் படைகளுடன் திரும்பினுன். வைக்கம் பத்மனுப பிள்ளை போர்ச்சங்கு ஊதினுர். கும்பினிப் படையும்-தளவாய் படையும் சந்தித்தது களத்திலே. தோவாளை அகதீஸ்வரம் இந்தப் போருக்குக் களமாயிற்று! ஏறக்குறைய ஒரு வாரம் நடைபெற்ற இந்தப் போரிலே ஆயிரமாயிரம் இளங்காளையரைப் பலி கொடுத்தான் தளவாய். நாட்டாசை பல வீரர்களைப் பலி கொண்டுவிட்டது, பத்மநாப பிள்ளை தளவாய்க்கு ஆறுதல் கூறினுர்; வெள்ளையர் ஓய்ந்தனர். சேதமோ அதிகம்-பின்வாங்கி ஓடினர்......

அரசன் துடித்தான். "வேலுதம்பி அடிபணிந்துவிடு! அவர்களோ, ஆதிக்க வெறியர்கள்-எதற்கும் அஞ்சாதவர்கள்-வேண்டாம் சிறுமதி" என்ருன். வேலுத்தம்பி கூறுவான்'; அரசே, எழுதி வேண்டுமானுலும் தருகிறேன், தவறு என்னுடையது என்று கூறிவிடுங்கள். முழுக் குற்றத்திற்கும் நானே பொறுப்பாகி விடுகிறேன். பரங்கி தருகிற தண்டனையை நான் ஏற்றுக்கொள்கிறேன்" என்ருன்.

அரசனே சின்னஞ் சிறுவன். நாடு போரிலே சிக்கித் தவித்தது!-வேலுவோ சிந்தித்தான்! பரங்கியர் மறுபடியும் படை திரட்டுவர், வெடி மருந்து வந்து சேர்ந்தால் மறுபடியும் பீரங்கி முழங்க ஆரம்பிக்கும்! மனமோ சிதறிவிட்டது! தோவாளைப் போரோ எண்ணற்ற வீரர்களை விழுங்கிவிட்டது. வேற்றுத்துணை கிடைத்தால்தான் முடியும் என்று எண்ணினுன்.

கொச்சித் திவானுக இருந்தவன்-பாலியத்தச்சன் அவனை நெருங்கினுன். நாட்டின் நிலையுணர்ந்த பாலியத்தச்சன் படை கொடுத்துதவினுன்! கொச்சி வீரர்களுடன் எர்ணுகுளத்தை நோக்கிச் சென்ருன் தளவாய் வேலுத்தம்பி!

எர்ணுகுளம் நல்ல சொகுசான இடம். வெள்ளையர் தங்கியிருந்த பாசறை. கும்பினி ஏஜெண்ட கர்னல் மெக்காலே மாளிகை கட்டி வீற்றிருந்தான்! ஆள் அடிமை ஏராளம்! மோதினுன் தன் வீரர்களுடன் வேலுத்தம்பி! முற்றுகையிட்டான்.

அறிந்தனர் கும்பினியினர்! வந்தது தீங்கு! மேலக் கடற்கரை வந்தவர்களை எல்லாம்வரவேற்று நின்றது தன் சிறந்த விளை பொருள் மிளகு அத்தனையும் வாரி வாரித் தந்தது. அவர்கள் தந்ததோ கண்ணுடி மணி! ஜெயந்தன் சங்கரன் நம்பூதிரிகள் இருந்தவரை பரங்கியரின் வேட்டைக்காடு தான் இந்தக் கேரளம்! இன்ருே வேலுத்தம்பி தளவாய்கள் தோன்றிவிட்டனரே! மிளகு வியாபாரம் படுத்தால் அப்புறம் கும்பினிக்கு ஏது அந்தஸ்து? ஆங்கில அரசாங்க உறவு பின் எப்படிக் கிடைக்கும்! எனவே கடைசி மூச்சாக மறுபடி தோவாளைப் பகுதியிலே மோதியினர்! அவர்கள் எண்ணமெல்லாம் எப்படியாவது தலைநகரைப் பிடித்துவிடலாம் என்பதே!

வேலுத்தம்பி பார்த்தான்; எர்ணுகுளம்கோட்டையைவிட்டு ஏஜெண்ட் கர்னல் மெக்காலே மாயமாய் மறைந்துவிட்டான். இரவோடு இரவே கப்பலில் ஏறி ஓடிவிட்டான்; வேலு திரும்பினுன் தோவாளைப் பகுதிக்கு!

எவ்வளவு நாள்தான் மனே வலிமை ஆயுத வலிமையை எதிர்த்து நிற்கும்? இந்தத் தடவை வேலுவின் படை சின்னபின்னமாக்கப்பட்டது! துப்பாக்கியும் பீரங்கியும் வெற்றி கண்டது, பரங்கியர் முன்னேறினர்!

நிலைமை மாறுவதைக் கண்டான் வேலுத்தம்பி! உயிர் நண்பர் வைக்கம் பத்மனுப பிள்ளை வேறு கைதாகிவிட்டான். தன்னுடலையும் அவர்களிடம் ஒப்புவிக்க விரும்பவில்லை வேலுத்தம்பி! எனவே பின்வாங்கினுன்-அவன் தம்பி அனந்தன் பத்மன் நம்பி-பின் தொடர!

மண்ணடி என்ற ஒரு ஊர் கொல்லத்திற்கு அருகாமையிலே உண்டு. அங்கேயிருந்த கோயிலின் உள்ளே புகுந்தான். தம்பியை அழைத்தான், உடைவாளை அவன் கையிலே தந்தான்.

தம்பி பரங்கியரின் கையிலே விழப் போகிற இந்த நாட்டில் நான் அவர்களிடம் மண்டியிட்டு அடிமையாக விரும்பவில்லை. சுதந்திரனுகவே மாய்ந்து போக விரும்புகிறேன். என் உடல் அவர்களுக்கு கிடைத்தால் என்னை சித்ரவதை செய்து என் மானத்தை போக்கிவிடுவார்கள்.

இந்தவாளைத்தூக்கு, என்னைத் துண்டாக்கிவிடு, வெள்ளையன் என்னை கண்டுபிடிப்பதற்கு முன்னே என்னுயிரை போக்கிவிடு என்ருன் அந்த வீரத்தளவாய்.

எப்படிக் கத்தி தூக்குவான்? உடன் பிறந்த சகோதரனை எப்படி கொல்லுவான்? தேம்பினுன், கைக்கத்தி கீழே விழுந்தது-தலையை நிமிர்த்திச் சொன்னுன்:

"முடியாது அண்ணு முடியாது, கோயிலுக்கு வெளியே பரங்கியர் படை காத்து நிற்கிறது. இன்னும் கொஞ்ச நேரத்தில் கதவு பிளக்கப்படும்-வீரர் உள்ளே வருவர் பிடித்துக்கொள்வார்கள்."

"நீயா என்னுடைய தம்பி! மாற்ருனுக்கு என் உடலைக் காட்டிக் கொடுக்கிறக் கயவன் நீ. இதோ பரங்கியர்! நாட்டின் மானத்தையே போக்கிவிட்டாய்-நீ நாயர் அல்லடா நாய்" என்று கத்தினுன். வெறிபிடித்த அவன் தோற்றம் பார்க்க பயங்கரமாகிவிட்டது.

நாயர்கள் கேரள நாட்டை செப்பனிட்ட வீரப்பரம்பரை-எத்தனையோ போர்க்களங்களில் கேரள நாட்டின் மானத்தை காக்க செங்குருதி சிந்தியபெருங் குடும்பம்-இனம்! நீ நாயர் அல்லடா! நாய் என்றவுடன் அந்த வீரனுடைய இரத்தமெல்லாம் கொதிக்க ஆரம்பித்தது! வாளைத் தூக்கினுன். ஒரு பக்கம் கூடப் பிறந்தானே என்ற இரத்த பாசம் அவன் கைகளை தாழ்த்தியது மறு பக்கம் தன் பரம்பரையே அவமானத்துக்குள்ளாக்கப்பட்டதே என்ற ரோஷம். அவன்கைகளை உந்தி எழுப்பியது! தலை வெட்டுப்பட்டது! பாதி தலை தொங்கிற்று. உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தது.

வெள்ளையர் கதவைப் பிளந்தனர்-உட்புகுந்தனர் அப்பொழுது நிமிர்ந்து பார்த்தான் வேலுத்தம்பி! தன் கட்டாரியை எடுத்து நெஞ்சிலே ஆழமாகப் பதித்துக்கொண்டான்.

கேரள நாட்டின் மானத்தைக் காக்கப் போராடிய போர் வீரன் உயிர் நீங்கியது. மறைந்தான் மாவீரன்.

வெள்ளையர் உயிரற்றஉடலைத் தான் கண்டனர்! வீதிகளிலே இழுத்துச் சென்றனர். திருவனந்தபுரம் கோட்டை வாயிலிலே தொங்கவிட்டனர்! எதிரே தோவாளைப் போரிலே கைதாக்கப்பட்ட பத்மநாப பிள்ளையைத் தூக்கு மேடையிலே நிறுத்தினர். நாட்டின் நிலையை கண்டான் பத்மநாபபிள்ளை. கண்ணீர் சிந்தினுன். தூக்கு கயிறு அவனை முத்தமிட்டது. அவன் உயிர் நீங்குகிற கடைசி நேரத்தில்,

"என்னுடு என்-னு-டு" என்று கதறினுன். மூன்ரும்முறை 'எ-ன்னுடு' என்றபோது அவன் உயிர் காற்றிலே கலந்தது-கதை முடிந்தது. பப்பாய் துறைமுகத்தின் அடிவானத்தை பார்த்தேன், மிக மிக அமைதியாக அந்த பரந்த கடற்கரை காட்சி அளித்தது. ★

நாவலர்
மறுமலர்ச்சி மன்றம்
வேலூர்.

9-2-58 மாலை 6 மணிக்கு

கண்ணதாசன்
தென்னரசு
பேசுவர்.



எங்கும் கிடைக்கும்.

198374

பதிவு எண்: எம். 6529 1-2-58 தென்றல்

போரும் அமைதியும்

நாக. முத்தையா, எ.கா.

உலகத்திலேயே சிறந்த நாவலாசிரியன் ஒருவன் உண்டென்றால் அவன் பால்ஸாக் ஆகும்; அதுபோலச் சிறந்த நாவல் ஒன்று உண்டென்றால் அது போரும் அமைதியும் (War and Peace) ஆகும். ரஷ்ய இலக்கியத்தில் ஒப்பற்ற படைப்பாகத் திகழும் பெருமை இந்நூலுக்கு உண்டு. இதை 'இதிகாச இலக்கியம்' எனப் பலரும் புகழ்கின்றனர்.

போரும் அமைதியும் என்ற புதினத்தை டால்ஸ்டாய் எழுதினார். எழுதும்போது அவருக்கு வயது முப்பத்தி ஆறு, எழுதி முடிக்கும்போது வயது நாற்பத்து இரண்டு. எனவே ஏறத்தாழ ஆறு ஆண்டுகட்கு மேலாகச் சிந்தித்துச் சீர்செய்து எழுதப்பட்ட புதினமே போரும் அமைதியும். கதை எழுதிக்கொண்டிருந்த காலத்தில் நாட்டில் அமைதி இல்லை; சமர் நடந்துகொண்டிருந்தது. நெப்போலியன் ரஷ்யாவைத் தாக்கிக்கொண்டிருந்தான். மாஸ்கோ நகரம் அடிக்கடி அக்னிக்கு இரையாக்கப்பட்டு வந்தது. மக்கள் கொள்ளையிட்டும் கொள்ளையிடப்பட்டும் வாழ்ந்துவந்தனர். ஒரே வரியில் சொன்னால் மக்கள் மிருகங்களாக மாறிவிட்டனர்!

இந்தச் சமயத்தில்தான் டால்ஸ்டாய் தன்னுடைய பேனாவைத் தொட்டுக் கதையை எழுதத் துவங்கினார். கதை எழுதவேண்டும் என்ற ஆசையின் அடித்தளமாக அவர் கொண்டிருந்தது, ரஷ்யாவில் வாழும் நடுத்தர, பணக்கார மக்களைப் பற்றிய வாழ்க்கையைக் கதை வடிவில் சித்தரிக்க வேண்டும் என்ற எண்ணமேயாகும். மனிதன் கஷ்டப்படவேண்டும். கஷ்டங்கள் அதிகரித்துக்கொண்டே போகவேண்டும். அறம் அழியக்கூடாது. கஷ்டங்களிடையே கஷ்டப்பட்ட அறம், இறுதியில் வெற்றியை அடையவேண்டும். இதுதான் டால்ஸ்டாயின் நோக்கம்.

போரும் அமைதியும் என்ற புத்தகத்தில் ஏறத்தாழ ஐந்நூறு கதாபாத்திரங்கள் இருக்கின்றனர். ஒவ்வொரு பாத்திரமும் தனித்தனியே இயங்கும் வல்லமையும் சிறப்பும்பெற்று விளங்குகின்றன. ஆசிரியர் அவர்களை அறிமுகப்படுத்தி இருக்கும் விதம் கலைச்செறிவு மிகுந்ததாகும். அதுவே ஆசிரியரின் வெற்றிக்குப் பெருங் காரணமாகும்.

பணக்கார இனத்தைச் சார்ந்த நான்கு குடும்பங்கள் இக்கதையில் இடம் பெற்றுள்ளன. (1) ரோஸ்டோவ்ஸ் (2) போல்கோன்ஸ்கியிஸ் (3) குராகின்ஸ் (4) பிஸ்ஸிக்கோவ்ஸ் என்பனவே அக்குடும்பப் பெயர்கள். நான்கு குடும்பங்களின் பழக்க வழக்கங்களில் அதிக அக்கரை செலுத்தி அறிந்து அவற்றைப் பாத்திரங்களின் வாயிலாக பரமணிக்கச் செய்கிறார் ஆசிரியர்.

தான் அறிந்த அல்லது அறிமுகஞ் செய்யப்பட்ட மக்களை மனதில் வைத்துக்கொண்டு உண்மை நிகழ்ச்சிகளுக்கு கலை என்னும் மெருகுதீட்டிக்கதையை ஆசிரியர் படைத்துள்ளார். வடிகட்டின கஞ்சத்தனத்தோடு விளங்குகிற பிரபு ஆசிரியன் தாத்தாவாகும். நிக்கோலஸ் என்ற பாத்திரம் பெற்றெடுத்த தந்தையின் படப்பிடிப்பாகும். பெற்றெடுத்த தாயாரை மேரி என்ற பாத்திரத்தின் மூலம் விவரிக்கிறார். போரும் அமைதியும் என்ற புத்தகத்தில் குறிப்பிடத்தக்க இருவர் பியரியும் ஆண்ட்ரியூவும் ஆவர். அவ்விரு பாத்திரங்களையும் படைக்கும்போது ஆசிரியர் தன்னைத்தானே எழுத்துருவில் மாற்றி உள்ளார் என அறிஞர்கள் அபிப்ராயப்படுகின்றனர். இரண்டு பாத்திரங்களுக்கு முரண்பாடு நிறைய உண்டு. ஏனெனில் ஒரு பாத்திரம் உண்மையான டால்ஸ்டாயையும் மற்றொரு பாத்திரம் டால்ஸ்டாய் எப்படி வாழவேண்டும் என்ற எண்ணினாரோ அப்படிப்பட்டவரையும் குறித்து எழுந்தனவாகும்.

ஆண்ட்ரியூ வீர உணர்ச்சியும் இளமைத் துடிப்பும் இனப் பெருமையும், விரிந்த மனப்பான்மையும், தான்தோன்றித் தனமும், தளராத விளையாட்டுப் புத்தியும், முதிராத சிந்தனையும் உடையவன். பியரி அன்பும் அருளும் இளகிய மனமும் தன்னலப் பற்றி இன்மையும், பயன்பட வாழ வேண்டும் என்ற சிந்தனையும் உடையவன். ஆனால் இருவரையும் கதையில் காணும்போது நாமும் அவர்களோடு ஒன்றிப் போய்விடுகிறோமே தவிர விலகி இருக்க முடியவில்லை.

மேல்நாட்டு இலக்கியங்களின் வெற்றிக்குரிய ரகசியம் இளம் பெண்களை எழிலோடு சித்தரிப்பதாகும். வானிட்டி பயர் என்ற நூலில் எலிமியா என்ற சிறுமியையும், மான்ஸ்பீல்டு என்ற நூலில் பானி என்ற சிறுமியையும் தி எக்கோயிஸ்டு என்ற நூலில் கான்ஸ்டான்டியாதுர்காம் என்ற சிறுமியையும் டேவிட் காப்பர்பீல்டு என்ற நூலில் டோரா என்ற சிறுமியையும் படித்தவர்கள் என்றென்றும் மறக்கவே முடியாது. அவ்வளவு அறிவுத் தெளிவோடும் உணர்ச்சி வடிவோடும் படைக்கப்பட்டுள்ள பாத்திரங்கள் அச்சிறுமியர் அனைவருமாம். அதே வரிசையில் இடம் பெறத்தக்கவளேபோரும் அமைதியும் என்ற நூலில் சித்தரிக்கப்படும் நடாஷா என்ற சிறுமியும்! அவளது சிறுபிள்ளைத்தனமும் சிரித்த முகமும், விளையாட்டுத் தனங்களும், விந்தை நிகழ்ச்சிகளும் படிப்போரைத் தன்பால் ஈர்க்கும் பண்புடையவளாகும். நடாஷாவைக் காதலிப்பதுபோல நாம் வேறு யாரையும் இந்நூலில் காதலிக்கமுடியாது! 'நமக்கும் இத்தகைய நடாஷா கிடைக்கமாட்டாளா?' என்று நாம் ஏங்கும்படியாகப் படைத்திருக்கிறார் அப்பாத்திரத்தை டால்ஸ்டாய்.

ஆறு ஆண்டுகள் தொடர்ந்து எழுதியதாலும் ஆயிரக் கணக்கான பக்கங்கள் வரிந்து திட்டியதாலும் கதையில் சிறு சிறு குறைகள் காணப்படுகின்றன. நிகழ்ச்சிக் கோர்வைகள் படிப்பவருக்குச் சோர்வை ஊட்டுகின்றன. வரலாற்றுக் கதையில் அதிகப்படியாகமுக்கியத்வம்கொடுத்திருக்க வேண்டாம். கதை ஆசிரியர் சரித்திர ஆசிரியராக மாற முயலுவதால் ஏற்படும்குறைவே அதற்குக் காரணம். போரும் அமைதியும் என்ற முழு நூலில் இறுதியாகக் கூறும் முடிவுரை இருக்கிறதே அதுதான் மிக உயர்ந்த கலைப் படைப்பாகும். அதுபோன்ற மற்றொன்றை இனி எவரும் படைப்பதென்பது இயலாததாகும்.

டால்ஸ்டாய் பிறந்த குடும்பத்தில் அவருக்கு முந்தி எழுத்தாளர் பிறந்ததாக வரலாறு கிடையாது. 'ஒரு பெரிய எஸ்டேட்டின் சொந்தக்காரராய் பிறந்தார். ரஷ்யாவில் செல்வப் பெருமக்களைக் 'கவுண்ட்' என்று அழைப்பார்கள். அப்படிப்பட்ட கவுண்டுகளில் ஒருவராகப் பிறந்து, இளைஞனாக இருக்கும்போது பட்டாளத்தில் சேர்ந்து, பின்னர் வகையற்று எழுத்தாளராக மாறவேண்டி இருந்தது. எழுதுவதைத் தொழிலாகக் கொண்டுவருவாய் தேடவேண்டிய நிலையையும் இவர் அடைந்தார்.'

மேலும் டால்ஸ்டாய் தன் இளமைக் காலத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது:–'முதல் அண்ணன் படித்தார்-படிப்பு வந்தது; இரண்டாவது அண்ணன் படித்தால்-படிப்பு வரும்; மூன்றாவது அண்ணன் படிக்க விரும்பினார். படிப்பு வரவில்லை!' எனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் டால்ஸ்டாய் படிக்கவில்லை. படிப்பு வந்தது! உலகத்தையே படிக்க வைத்துப் படிப்பாளி என்ற சிறப்பைப் பெற்றுவிட்டார்!

டால்ஸ்டாய் இளைஞராக இருக்கும்போது குடிப்பதிலும் கூத்தியார் வீடு போவதிலும் ஈடு இணையற்று விளங்கினார். அதுபோலவே சூதிற்கும் அஞ்சமாட்டார். சூது, தீங்குதர வல்லது என்பதைப் பலர் எடுத்துச் சொல்லியும் தானே அறிந்திருந்தும் டால்ஸ்டாயால் அதை விடவே முடியவில்லை. இரவு பகலாகச் சில சமயங்களில் சீட்டாடுவதில் ஈடுபட்டுவிடுவார். ஒருமுறை ஒரே நாளில் ஆயிரக்கணக்கான சாமான்களை விற்றுச் சீட்டாடிச் சீரழிந்துள்ளார். சீட்டாட்டம் இவரைக் கடன்காரராகஆக்கி இருக்கிறது.

திருமணம் ஆகாமலேயே இல்வாழ்க்கை சுகங்களை ஏராளமான தடவைகள் மறைமுகமாக அனுபவித்துள்ளார் டால்ஸ்டாய். தோட்டத்தில் வேலை செய்து வந்த பெண்ணைத் தொட்டிழுத்து அவளை ஒரு பிள்ளைக்குத் தாயாக்கிவிட்டார் என்னும்போது அவரது காம இச்சைகளைப்பற்றிக் கூறவா வேண்டும்?

டால்ஸ்டாய் தன்னைச் சிங்காரித்துக்கொண்டு அழகானவன் என்று பெயரெடுக்கப் பெரும்பாடுபட்டுள்ளார். ஆண்டவன் முன் நின்றுகொண்டு 'என்னை அழகியவனாகச் செய்துவிடு' என்று மணிக்கணக்காகப் பிரார்த்தனை செய்திருக்கிறார். ஆண்டவன் மனம் இரங்கவே இல்லை. அதனால்தான் தன்னை இன்னும் விகாரப்படுத்திக் கொள்ள விரும்பிய ஆசிரியர் தாடி வளர்க்கத் துவங்கிவிட்டார்!

டால்ஸ்டாயின் மனைவி ஒரு அடங்காப்பிடாரி. தன்னலப்பற்றுள்ளவள். ஊர் வாழப் பொறுக்கமாட்டாள். ஆழ்ந்த சிந்தனை இல்லாதவள். மனைவியால் அடைந்த துன்பங்களைப்பற்றிக் குறிப்பிடும்போது 'நான் அவற்றை மன்னிக்கத் தயாராக இருக்கிறேனே தவிர மறக்கத் தயாராக இல்லை,' எனக் குறிப்பிட்டுள்ளார்,

'மனமே திருமணத்தைப்பற்றி எண்ணாதே!'

'நான் ஒரு பைத்தியக்காரன்; எனக்குக் காதலில் நம்பிக்கை இல்லை' என்று பிற்காலத்தில் மனம் துறந்து எழுதும்படியாகச் செய்தது ஆசிரியரின் மனைவியேயாகும்.

இங்ஙனம் சுற்றுப்புறத்தாலும் சூழ்நிலையாலும் பாதிக்கப்பட்டு, பண்புற்று, படிப்புற்று விளங்கிய நேரத்தில் எழுதப்பட்ட காரணத்தால்தான் போரும் அமைதியும் என்ற புதினம் உலகம் போற்றும் நூல்களில் ஒன்றாக விளங்கி வருகிறது. ★

ராஜாபார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்.
PRO: அ. சங்குபிள்ளை, B.A., திண்டுக்கல்ரோடு, மதுரை

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு

M241,N54TL
N58;4129